Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-11455)

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-09 22-03-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 32

– ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள –

# பொலநறுவை தீவுச்சேனையில் நேற்றுக்காலையில் மோதல்

## தேசவிரோதக் குழுவினர் நால்வர் படுகாயம் பலியான இருவர் அடையாளம் காணப்படவில்லை!

(கொழும்பு)

**பொலநறுவை மாவட்டம் தீவுச்சேனைப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் பலியாகியதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இப் பகுதியில் காலை 6.00 மணி முதல் 7.00 மணிவரை மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இம்மோதலில் காய மடைந்தவர்களில் ஒருவர் அப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் ஆதரவுடன் நிலை கொண்டிருந்த தேச விரோத ஆயுதக்குழுவுக்குப் பொறுப் பான மங்களம் மாஸ்ரர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் பெலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் னர். பலத்த பாதுகாப்புடன் கொழும்பு தேசிய மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை யிலும்,பொலநறுவை வைத்தியசாலையிலும் அனுமதிக் கப்பட்டுள்ளவர்களுக்கு சிறிலங்கா படைத்தரப்பால் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வெளியார் எவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரணம் தொடர்பில் திருமலையில் மக்கள் போராட்டம்

திருமலையில் நேற்று மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது. திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் காரியாலயத்தின் முன்னால் காலை முதல் ஜமாலியா பிரதேச மக்கள் சுனாமி நிவாரணங்கள் தமக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும், நிவாரணப் பகிர்ந்தளிப்பில் காணப்படும் பாகுபாட்டினை உடனடியாகத் தீர்க்குமாறு கோரியும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் பிரதேச செயலாளர் காரியாலயத்தினைச் சுற்றியிருந்ததனால் ஊழியர்களுக்கு காரியாலயத்தினுள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருந்த நிலையில் நிலமையை சுமுகப்படுத்தும் வகையில் பிரதேச செயலாளருக்கும், மக்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று இணக்கப்பாடு ஏற்பட்டதன்பின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

## அரசாங்கம் தான்செல்லும் பாதையை மக்களுக்குத் தெளிவாகக் கூறவேண்டும்!

-எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

சமஷ்டி முறை தொடர்பாக அரசாங்கத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பலர் முரண்பட்ட தகவல்களை வெளியிட்டுவருவதனால்இது தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப் பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எனினும் எந்தப்பாதையால் செல்லவேண்டும் என்பதில் அரசாங் கம் கூடத் தெளிவற்று இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

சமஷ்டிமுறை தொடர்பாக அரசாங்கத்தை பிரதி நிதித்துவப் படுத்தும் பல நபர்கள் விடுவிக்கும் முரண்பட்ட கூற்றுக்களால் மக்கள் கைவிடப்பட்ட நிலையிலுள்ளனர்.

அரசாங்கம் சமஷ்டி முறை தொடர்பான தமது தெளிவான நிலைப்பாட்டை மக்கள் முன் தெளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்க நிகழ்வும், நடுகல் திரை நீக்கமும்

(புதுக்குடியிருப்பு)

05.01.2000 அன்று வீரச்சாவடைந்த லெப்டினனட் மதியமுதன் (பெரியசாமி சந்திரகாந்தன்,கண்டி த.மு.நெடுங்கேணி வீதி,ஒட்டுசுட்டான்.

என்னும் மாவீரரின் நினைவுக் கல் நாளை திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. இவரது திருவுருவப்படம் இன்று காலை 10.00 மணிக்கு இம் மாவீர ரின் தற்காலிக இல்லத்தில் வைக் கப்பட்டு நாளை காலை 9.00 மணிக்கு மலரஞ்சலிக் காக சின்னத் தம்பி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் வைக்கப் படும். பின்னர் 11 மணியளவில் முள்ளிய வளை துயிலும் இல்லத் தில் பூரண இராணுவ மரியாதை யுடன் நினை வுக்கல் திரைநீக்கம் செய்யப்படும். (8)

## ஓட்டமாவடியில் முஸ்லிம் வர்த்தகர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் நேற்றிரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் நகைக்கடை வர்த்தகரான சேகு லெப்பை ராசீக் (வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின்போது அவரது 18 வயது மகள் காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது வீட்டிற்கு வந்த 3 ஆயுத பாணிகள் பெயர் குறிப்பிட்டு அழைத்தவாறு உள்ளே சென்று சாப்பிட்டுக் கொண்டிருந்த வர்த்தகர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரகுபதி குடியிருப்புத் திட்டம் புதூர் பகுதியில் திறந்துவைப்பு

போர்ச்சூழல் காரணமாகவும் ,சமூகப் பொருளாதார ரீதியாக இருப்பிட வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வந்த மக்களுக்காக தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட குடியிருப் பொன்று நேற்றுப் புதூாப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நேற்றுக் காலை 9.00 மணியாவில் புளியங்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீப் தலைமையில் இடம் பெற்றது இந்நிகழ்வில் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர். சோ. தங்கன் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் படத்திற்கான சுடரினை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றிவைத்தார்.அதனைத் தொடர்ந்து ரகுபதி குடியிருப்புத்திட்டம் எனப் பெயர் சூட்டப்பட்ட குடியிருப்பின் பெயர்ப் பலகையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து தலைமையுரை, சிறப் புரைகள் இடம்பெற்றன சிறப்புரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப் பாளர் பொன்தியாகம், தமிழர் புனர் வாழ்வுக்கழக துணை நிறை வேற்றுப் பணிப்பாளர் நீகன், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர் அலை ஆகியோர் நிகழ்த்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டினுள் புகுந்த யானை நெல்மூட்டையைக் காவிச் சென்றது

-புதூர் பகுதியில் சம்பவம்

(அலுவலக செய்தியாளர்)

புதூர்க் கிராமத்தில் காட்டு யானை ஒன்று வீட்டினுள் புகுந்து நெல் மூட்டை ஒன்றைத் தூக்கிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. எல்லோரும் வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்தவேளை திடீரென வீட்டினுள் புகுந்த யானைஅடுக்கியிருந்த நெல் மூட்டைகளில் ஒன் றைக் காவிச் சென்றுள்ளது.

கடந்த சில நாட்களாக இந்த யானையின் நடமாட்டம் அப்பகுதியில் இருந்து வந்தது யானைகளின் கூட்டத்தில் இருந்து தனியாகப் பிரிந்து வந்த இந்த யானை மூர்க்கத்தனமாக நடந்து வருகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதனால் மக்கள் இரவு வேளைகளில் பயப்பீதியுடனேயே இருக்கின்றனர். (தீ)

## சிறில. சிப்பாய் ஹெய்ட்டியில் பலி!

ஹெய்ட்டியில் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையின் சார்பில் கடமையாற்றிய இலங்கையின் இராணுவச் சிப்பாய் நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இவர் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஏச். எம். விஜயசிங்க எனவும், மஹியங்கணைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. கடந்த யூனில் அனுப்பப்பட்ட அமைதிப்

(12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்


### அறிவித்தல்

ஜெயபுரம் சந்தைமுன்பாக உள்ள பிரசாத் ஸ்ருடியோ எனும் ஸ்தாபனம் விற்பனைக்குண்டு எடுக்க விரும்புவோர் நேரில் வரவும். தகவல், பிரசாத்போட்டோ, ஜெயபுரம்.(5870)

### விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றிற்கு மிக அண்மையில் புனித சூசையப்பர் கோவில் வீதியில் வீடு, காணி சகல அடிப்படை வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இன்பம் மணிக்கூட்டு விற்பனை நிலையம், புதுக்குடியிருப்பு இனியவள் அழகு மாடம் பிரதான வீதி, முல்லைத்தீவு.(5809)

### தவறிவிட்டது

21.03.2005 அன்று காலை 9.00 மணிக்கு வட்டக்கச்சிக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் ஜீ.சுரேஸ் குமார்,மேரிறெஜினோட் சுரேஸ்குமார் என்பவர்களுடைய 2 தேசிய அடையாள அட்டைகள், 2 நிரந்தர பயண அட்டைகளும் தவறவிடப் பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது இவ் அடையாளஅட்டையின் முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் ஜீ.சுரேஸ் குமார்.உழவனூர்சந்தி. (5871)


# அம்பாள்குளம் கிராமத்தில்; குமா சிறுவர் பூங்கா திறப்பு!

(அலுவலக செய்தியாளர்)

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அம்பாள் குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற குமா சிறுவர் பூங்கா திறப்புவிழா நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு குமாபூங்கா நிர்வாகி பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க, மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை, தமிழர் புனர் வாழ்வுக் கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நிறுவன முன்பள்ளிக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன.

அதனையடுத்து குமா சிறுவர் பூங்காவின் பெயர்ப் பலகையினை தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அன்பரசன் திரைநீக்கம் செய்துவைக்க, கல்வி நிலையத்தினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களும், அலுவலக கட்டடத்தினை த.பு.கழகத்திட்டப் பணிப்பாளரும், சிறுவர் பராமரிப்பு நிலையத்தினை மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சனும், கலைக்கூடத்தினை அம்பாள் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கிருஸ்ணசாமியும் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர், கிளிமாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர், த.பு.கழக திட்டப் பணிப்பாளர், த.பு. கழகத்தைச் சேர்ந்த கெங்காதரன் , அம்பாள்குளம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறார்களின்



கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. குமா சிறுவர் பூங்காவில் இதுவரை 240 சிறார்கள் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# குடும்பப் பெண்ணின் சடலம் கிணற்றில்இருந்து மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவமானது. நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது

ஜெயந்திநகரில் அவர்தற்காலிகமாக வசித்துவந்த வீட்டின் கிணற்றில் இருந்தே அவரின் சடலம் மீட்கப்பட்டது. சித்திரமூர்த்தி கலைவாணி (வயது 26) என்ற அப்பெண்மணியின் சடலத்தை தமிழீழகாவல்துறையினர் கிணற்றில் இருந்து இரவு 8.00 மணியளவில் நீதியாளர் முன்னிலையில் மீட்டுள்ளனர்.மேலதிக விசாரணைகளைக் காவல்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர். (கு)

## சந்திப்பு இடமாற்றம்

பாண்டியன் குளம் பிரதேசத்துக்கான அனைத்து தேசிய எழுச்சிப் பேரவைக்கான சந்திப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.எனப் பாண்டியன் [illegible]ம் பிரதேசப்பொறுப்ப[illegible]ளர். சி[illegible]க்கியன் தெரிவித்துள்ளார். [illegible]புத தொடர்பாக நேற்று [illegible]ளியான செய்தியில் பாலிநகர் அரசியல் துறைச் செயலகத்தில் சந்திப்பு இடம்பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


## கண்டெடுப்பு

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் முத்துலிங்கம் கிருபாகரன் என்பவரது அடையாள அட்டை, நிரந்தரப்பயண அனுமதிப்பத்திரம், சிறு தொகைப் பணம், மற்றும் சில ஆவணங்கள் என்பன அடங்கிய பணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு, கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டோர் அலுவலக நேரத்தில் பெற்றுக கொள்ளவும். (12)


# -வவுனியா கல்வியியற்கல்லூரியில் பகிடிவதை-

# ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி; இரு மாணவர்கள் இடை நிறுத்தம்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் மீது மேற்கொண்ட பகிடிவதையினால் ஒருவர் சுகயீனமுற்று வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். பகிடிவதையில் ஈடுபட்ட இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் இருவர் கல்வியியற்கல்லூரி நிர்வாகத்தினால் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பீடாதிபதி க.பேனாட் தெரிவிக்கையில்; கடந்த சனிக்கிழமை இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் சிலர் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர் ஒருவர் மீது மேற்கொண்ட பகிடிவதையினால் பாதிப்படைந்த முதலாம் வருட ஆசிரிய பயிலுநர் கல்லூரி உப பீடாதிபதியால் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரிய பயிலுநரை வவுனியாப் பொலிசார் விசாரணை செய்தனர். நானும் அவரை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டேன். அவரை பகிடிவதையில் ஈடுபடுத்திய நான்கு இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களில் ஒருவரையும், வேறு முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களை பகிடிவதை செய்த மேலும் ஒரு இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநரையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தி உள்ளோம்.

பாதிக்கப்பட்டு வைத்திசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர் கல்லூரிக்கு வருகை தந்து தன்னைப்பகிடிவதையில் ஈடுபடுத்திய ஏனைய மூன்று ஆசிரிய பயிலுநர்களையும் இனங்காட்டும்போது அவர்களையும் கல்லூரியில் இருந்து இடை நிறுத்தத் தீர்மானித் துள்ளோம்.

இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் பகிடிவதை குறித்து எமக்கு மேலும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# சட்டவிரோத சாராய விற்பனை; வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா செய்தியாளர்)

அனுமதி பெறாது சட்டவிரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்ட இருவரை வவுனியாப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கோயில்குளத்தில் சாராய விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவரையும், மில் வீதியில் சாராய விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவரையும் கைது செய்த வவுனியாப் பொலிசார் இவர்களை வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளனர். (10)


## கண்ணீர்ப் பூக்கள்



### சித்திரமூர்த்தி கலைவாணி

[கணக்காளர் நிதிப்பிரிவு அரசியல்துறை]

பிறப்பு :- 1978-03-16 இறப்பு :- 2005-03-20

நிறுவன சேவையாளராய் எல்லோர் முகங்களையும்
பண்பாய் கவர்ந்திருந்தாய்
செய்யும் கடமைதனில் கண்ணியமாய் கணக்காய்வாளராய்
சேவை செய்து மேலும் உயர்வாய்-என நாம்
எண்ணி மகிழ்ந்திருந்தோம்.

வாழ்க்கை வசந்தங்களை- சுமந்து
மகிழ்வுடன் வாழ்ந்திடுவாய்- என நாம்
நினைந்து மகிழ்ந்திருந்தோம்.

காலத்தின் கோலம் என்பதால்-உனை
எண்ணி அழுகின்றோம்.
பிரிவிதனை ஏற்க எம் மனம்-மறுக்கிறது
வசந்தகால சோலையாய் இருந்தாய்
இன்று சருகாகி ஏன் உதிர்ந்தாய்.

உன்பிரிவால் வாடித்துடிக்கும்
உன் உறவுகளின் துயர்தனில்
நாமும் சங்கமித்து கண்ணீர்ப்
பூக்களை காணிக்கை யாக்குகின்றோம்.

போராளிகள், பணியாளர்கள்,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை.

(சி.11570)

## கேள்வி அறிவித்தல்

பெறுமதி சேர் வரியின் (விஏரி) பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும், அனுமதிக்கப்பெற்றசங்கங்களிடமிருந்தும் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் கிளி.மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

01. யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் தற்காலிகமாக வட்டக்கச்சிக்கு இடம்மாற்றுதல்.

கேள்விப் பத்திரங்கள் 2005.04.06 ஆம் நாள் பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திர முடிவுநாள் 2005.04.07 ஆம் நாள் காலை 10.00 மணிவரை.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/கிளி.மாவட்டச்செயலக கேள்விச்சபை,
தலைவர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.11606)

# அராலியில் உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்றிய தேசியக் கொடியை இறக்க பொலிசார் வற்புறுத்து

## மக்களின் எதிர்ப்பால் முறியடிப்பு

(அராலி)

**அராலி கிழக்கு மாவத்தையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக்கொடியை இறக்குமாறு சிறிலங்காப் பொலிசார் பணித்தபோதிலும் பொதுமக்களின் செயற்பாட்டினால் அந்நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளது.**

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகத்தின் வெள்ளி விழாவையொட்டி இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நிகழ்விற்கு தமிழீழத் தேசியக்கொடி யேற்றப்பட்டிருந்தது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து உந்துருளிகள் மற்றும் ஜீப்பில் .வந்த பொலிஸ் அணியினர் தமிழீழதேசியக் கொடியை இறக் கும்படி கூறியபோதிலும் இந்நிகழ் வில் கலந்துகொண்ட பொதுமக்கள் காட்டிய எதிர்ப்புக் காரணமாக அவர்களுடைய செயல் கைகூடாத நிலையில் திரும்பிச்சென்றனர். இந்நிகழ்வுகள் யாவும் மிகவும் அமைதியான முறையில் நடந்து முடிந்தது. (41)

# ஒப்பந்தத்தின் பின்னரும் ஊடகவியலாளர் மீது படையினரின் தாக்குதல் தொடர்கிறது

### *வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர் தெரிவிப்பு*

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னான காலப்பகுதியிலும் கூட ஊடகவியலாளர்கள் படையி னரால் தாக்கப்படுவது தொடர்கிறது என வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தலைவர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட சிறிலங்கா படைத் தளபதியுடனான சந்திப்பில் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இலங்கைப் போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழுவின் யாழ். அலுவ லகத்தில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப்பிரதிநிதி களுக்கும், படையினருக் குமிடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சி.கதிர்காமத் தம்பி தலைமையிலான நிர்வாக சபை அங்கத்தவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

படைத்தரப்பின் சார்பில் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோன் மற்றும் படையினரின் சிவில் நிர்வாகக் காரியாலயத்தைச் சேர்ந்த மேஜர் வணிகசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

"புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியிலும கூட செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் படையினரால் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருகின் றனர். இது தொடர்பாக முன்னர் படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத்பொன் சேகாவுடன் இதே இடத்தில்



பேச்சுக்களை நடாத்தி எடுத்துக் கூறியிருந்தோம். ஆனாலும் இவ்விட யத்தில் எந்தவொரு முன்னேற் றமும் ஏற்பட்டிருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுவதுடன் அவர்களுடைய உடமைகளும் தொடர்ந்தும் சேதமாக்கப்படுகின்றன.

அண்மையில் கூட பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் லேக்-ஹவுஸ் பத்திரிகையான தினகரனின் செய்தியாளரான வின்சன் ஜெயன் தாக்கப்பட்டார். அவர் அரசின் ஊடகத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினைக் காண்பித்தபோதும் தாக்கப்பட்டுள்ள துடன்ஏனைய பத்திரிகையாளர்கள் இருவரினது வாகனங்களும் சேதமாக்கப்பட்டதாக சி.கதிர் காமத்தம்பி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி இவ்வாறான அசம்பா விதங்கள் எதிர்வரும் காலங்களில் தொடராதிருப்பதற்கு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (27)

*-யாழ் . பல்கலைக்கழகத்தின்-*

## நிர்வாகத் தர ஊழியர்கள் நேற்று வேலைப் பகிஷ்கரிப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நிர்வாகத்தரத்திலான ஊழியர்கள் நேற்றுக் காலை ஒருமணிநேரம் வேலைப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே பதிவாளராக இருந்த ஒருவருக்கு எதிராக ஊழியர் தொழிற்சங்கம் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்தியதன் பெயரில் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது

இந்நிலமையில் பல்கலைக்கழக கவுன்சில் மீண்டும் வேலையை வழங்கவேண்டும் எனத் தீர்மானம் எடுத்துள்ளது.

பல்கலைக்கழக கவுன்சிலின் தீர்மானத்தை நிறைவேற்றக்கோரி நேற்று நிர்வாகத்தரத்தில் உள்ளவர்கள் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டபோதிலும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அடுத்து நடைபெறும் பல்கலைக் கவுன்சில் கூட்டத்தில் உறுதிப்படுத்தி வேலைக்கு அமர்த்துவதாகத் தெரிவித்த வாக்குறுதியின்பெயரில் வேலைநிறுத்தம் அடுத்தவாரம்வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது. (41)

## சுன்னாகம் பிரதேசத்தில் கலாச்சார மண்டபம் அமைப்பு

(மல்லாகம்)

சுன்னாகம் பிரதேச எல்லைக்குள் பாரிய கலாச்சார மண்டபம் ஒன்றை அமைப்பதற்குச் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் காணியை வழங்க முன்வந்துள்ளனர்.

சுன்னாகம்நகரத்திற்கு அண்மையாக வழங்குவதாகக் கூறப்பட்ட இக்காணியில் கலாச்சார மண்டபம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஏற்றுக்கொண்டுள்ளார். (41)

## தாவடியில் உந்துருளிகள் விபத்து; தாயும், இரு பிள்ளைகளும் காயம்

(தாவடி)

யாழ்ப்பாணம் தாவடிப்பகுதியில் நேற்று முன்தினம் இரு உந்துருளி கள் மோதுண்டு விபத்துக்குள்ளான தில் தாயும் அவரது இரண்டு பிள்ளைகளும் காயமடைந் துள்ளனர்.

நாயன்மார்க்கட்டைச்சேர்ந்த திருமதி சகாதேவன் என்பவரும் அவருடைய எட்டுவயது மற்றும் ஏழுவயதுடைய இரு பிள்ளை களுமே இச்சம்பவத்தில் காயமடைந் தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்:

மதுபோதையில் உந்துருளியை ஓட்டி வந்தவர், பிள்ளைகளுடன் உந்துருளியில் முன்னால் சென்று கொண்டிருந்த பெண்ணை மோதி யுள்ளார். காங்கேசன் துறை வீதியில் உள்ள தாவடி மதுபானக் கடைக்கு முன்னால் இவ் விபத்து இடம்பெற்றது. இச்சம்பவத்தை அடுத்து மதுபானக்கடையில் இருந்து மதுபோதையில் வந்த வேறொரு இளைஞர் பணத்தைக் கொடுத்து காயமடைந்தவர்களை அனுப்பும்படி மோதியவருக்குக் கூறியதைத் தொடர்ந்து ஆத்திர முற்ற அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் அவரை ஓடஓட விரட் அடித்துள்ளனர். (41)

## சிவகுருநாதர் வீதி திருத்தப்படவில்லை

(நீராவியடி)

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான சிவகுருநாதர் வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருப்பதனால் இப்பாதையைப் பயன்படுத்தும் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றார்கள்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்களும், பொதுமக்களும் பிரயாணம் செய்யும் இவ் வீதியைத்திருத்த முன்வராமையையிட்டு பொதுமக்கள் கண்டனங்களைத் தெரிவிக்கின்றார்கள். (41)

## முல்லை அரச அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் மாதாந்தக் கலந்துரை யாடல்கள் எதிர் வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதென முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

மாவட்ட விவசாய குழுக் கூட்டம் 24 ஆம் திகதி காலை 10.00 மணிக்கும், அவசர புனர்வாழ்வு புனரைமைப்பு அபிவிருத்தித் திட்டகூட்டம் (நீரப்) 11.00 மணிக்கும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பகல் 1.30 மணிக்கும், உலக உணவுத் திட்டக் கூட்டம் 12.00 மணிக்கும், யூ.என்.டி.பியின் ஐ.ஆர்.ஆர்.பி. திட்டக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கூட்டம் பி.பகல் 3.00 மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் கூட்டம் பிற்பகல் 4.00 மணிக்கும் இடம்பெறும். அத்தியாவசிய தேவைகள் குழுக் கூட்டம் 25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கும், நியாப் திட்டக் கூட்டம் பிற்பகல் 1.30 மணிக்கும், நடைபெறவுள்ளது. (20)

## சாதனையாளர் கௌரவிப்பு

முல்லைத் தீவு மாவட்டத்தின் சாதனையாளர்கள் மக்கள் வங்கியினால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு புதுக்குடியிருப்பு மக்கள் வங்கியில் கடந்த வாரம் நடைபெற்றது.

வங்கிக் கிளை முகாமையாளர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்டவரும் முதன்மையான சாதனையாளருமான சிலாவத்தையைச் சேர்ந்த மருதநாயகம் ஜெரோம் என்பவருக்கே கௌரவிப்பும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ்.வன்னி பிராந்திய முகாமையாளர் கணபதிப்பிள்ளை சிவபாத விருதயர் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் துவிச்சக்கரவண்டியும் பாடபுத்தகமும் வழங்கிக்கௌரவித்தார். (20)

## முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

போர் அனர்த்தங்கள், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிப் பதாக நிறுவப்படும். நலன்புரி நிலையங்களைப் பராமரிப்பது தொடர்பான முகாமைத்துவப் பயிற்சி நெறி வகுப்பொன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசர ணையுடன் வெண்புறா நிறுவனத் தில் இடம் பெற்றது.

கடந்த 16 ஆம் திகதி தொடக் கம் 21 ஆம் திகதி வரை ஆறு நாட்கள் இடம் பெற்ற இம் முகா மைத்துவப் பயிற்சி வகுப்பினை நோர்வே நாட்டு அகதிகள் பேர வையின் (MRC) இன் வழிகாட்டல் களுடனும், நெறிப் படுத்தல்களுட னும் இடம் பெற்றது.

தமிழர்புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 22 பேர் கலந்து கொண்ட இம் முகாமைத்துவப் பயிற்சி வகுப்பின் இறுதி நாளான நேற்று பயிற்சி பெற்றதற்கான சான்றி தழ்களும் வழங்கப்பட்டன.

நோர்வே அகதிகள் பேர வையைச் சேர்ந்தவர்கள் இம் முகா மைத்துவப் பயிற்சிகளை வழங்கியி ருந்தனர். இறுதி நாளான நேற்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமில் பணிப்பாளர் லோறன் கிறிஸ்ரி கலந்து கொண்டு கருத் துக்கள் வழங்கியதுடன் பயிற்சி களை வழங்கிய நோர்வே அகதி கள் பேரவையும் தமது நன்றி களைத் தெரிவித்து 22 பயனாளி களுக்கு சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டுதல்களையும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மலரவன் நம்பிக்கை நிதியக் கலந்துரையாடல்

மலரவன் நம்பிக்கை நிதியம் பெற்று வரும் யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கான மீளாய் வுக்கூட்டம் நாளை பி.ப 4.00 மணிக்கு யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு அலுவலகத்தில் இடம் பெற வுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி மீளவும் இந்நிதியினைப் பெறு வதை உறுதிப்படுத்திக் கொள்ளு மாறு தமிழீழ மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

## இலவச தொழில் நுட்ப செயல் விளக்கம்

(திருமலை)

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட அனுசரணையுடன் நவீன கட்டுமான தொழில் நுட்ப செயல் விளக்கம் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

திருமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை குறைந்த செலவில் தரமான வீடுகளை நிர்மாணிக்கக் கூடியதாக இச்செயல் விளக்கம் நடத்தப்படவுள்ளது.

# வீதி விதிமுறைகளை சகலரும் பின்பற்றினால் விபத்துக்கள் இடம்பெறாது தவிர்க்க முடியும்


## காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவுறுத்து

**வீதி விபத்துக்களைத் தடுப்பதாக இருந்தால் வீதியைப் பாவிக்கும் சகலரும் வீதியின் விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் எனத் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.**

எமது பகுதியில் நடைபெறுகின்ற விபத்துக்களைப் பார்க்கும் போது விபத்துக்களில் சம்பந்தப்படும் நபர்களில் யாரோ ஒருவர் வீதியின் விதிமுறைகளைத் கடைப்பிடிக்காது வீதியைப் பாவித்துள்ளார் என அறிய முடிகின்றது. வீதியைப் பாவிப்பவர்கள் மூன்று சாரார்களாகும். 01) பாதசாரிகள் 02) துவிச்சக்கர வண்டி ஓட்டிகள் 03) சாரதிகள் இவர்களுக்கென வீதியைப் பாவிக்கும் விதிமுறைகள் உள்ளன. இவற்றை இவர்கள் பின்பற்றாது நடப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. பாதசாரிகள் வலது பக்கமாக நடக்க வேண்டுமென்றால் அதைக் கடைப்பிடிப்பது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இவர்கள் இடது பக்கமாக நடந்து செல்கின்றனர். எமது பகுதியில் பாதசாரிகளுக்கான நடைபாதை இல்லை வீதியின் ஓரமாகவே பாதசாரிகள் நடக்கின்றனர். வீதியின் அகலம் குறைவாக இருக்கும் போது வீதி விதிமுறைகளையும் கடைபிடிக்காது நடந்தால் விபத்துக்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இதை பாதசாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் துவிச்சக்கர வண்டி ஓட்டிகள் பக்கம் பக்கமாகச் செல்லுதல். இதனாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மோட்டார் சைக்கிள், ஹைஏஸ் சாரதிகள் எம்மால் வரையறுக்கப்பட்ட வேகக்கணிப்பை விட கூடுதலான வேகத்தில் சென்று விபத்துக்களை ஏற்படுத்துகின்றனர். சாரதிகள் வீதியின் இடது பக்கத்தால் வாகனத்தை செலுத்தும் போது இடது பக்கத்தில் வேகக்கணிப்பு இடப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப வாகனங்களை செலுத்துதல் வேண்டும். ஒரு நல்ல சாரதியாக இருந்தால் அவர் வீதியின் வதிமுறைகள் தெரிந்தவராகவும் நன்கு வீதியைப் பற்றி தெரிந்தவராகவும் இருந்தல் வேண்டும். ஆகவே வீதியின் விதிமுறைகளை வீதியைப் பாவிகும் சகலரும் கடைப்பிடித்து நடந்தால் விபத்துக்கள் நடைபெறாது தவிர்க்கலாம் எனத் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## இன்று கலந்துரையாடல்

முழங்காவில் பிரதேச அனைத்து அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு முழங்காவில் மாவீரர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் அனைத்து அமைபுக்களையும் கலந்து கொள்ளுமாறு முழங்காவில் பிரதேச அரசியல் துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.



உருத்திரபுரம் மகப்பேற்றுமனையில் பழைய கட்டடத் தொகுதியில் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதன் காரணமாக மகப்பேற்று மருத்துவமனைக்கு மாதாந்த கிளினிக் சிகிச்சை மேற்கொள்ள வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மரநிழலில் தங்கியிருந்தே சிகிச்சை பெற்று வருவதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது. மேற்படி உருத்திரபுரம் வைத்தியசாலையில் பலலட்ச ரூபா செலவில் புதிய மகப்பேற்று மனை ஒன்று கட்டப்பட்டு கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது. புதிய மகப்பேற்றுமனையின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து மூன்று மாத காலத்திற்கு மேலாகியும் இதுவரை மேற்படி மகப்பேற்று மனையில் மகப்பேற்று சிகிச்சை மேற்கொள்ளப்படாதுள்ளமையின் காரணமாக பிரதேச மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். (படம்:-சோதி)

## பத்து லீற்றர் கசிப்பு மீட்பு சந்தேக நபர் தலைமறைவு

(வட்டக்கச்சி)

இராமநாதபுரத்தில் தமிழீழ காவல்துறையினரின் திடீர் சோதனையின் போது சட்ட விரோத உற்பத்தி செய்யப்பட்டகசிப்பு கைப் பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வரு வதாவது.

கடந்த 16 ஆம் திகதி இராம நாதபுர ஏழாம் யூனிற் சின்னச் சந்தைப் பகுதியில் திடீர் சோதனையில் பத்து லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். இவரை கைது செய்யும் பணியில் வட்டக்கச்சி காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ச்சியாக இப் பகுதியில் கசிப்பு ஒழிக்கும் நடவடிக்கையில் காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். (12)

## சமூக விழிப்பு பயிற்சிகள் மன்னாரில் நடத்தப்பட்டது

(மன்னார்)

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆண்டான்குளம் குமானாயன்குளம் மக்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

நிகொட் திட்டச்செயலகத்தில் கடந்த 19 ஆம் திகதி "முன்பள்ளிச் சிறார்களின் கல்விக்கான பெற்றோரின் பொறுப்பு" என்ற தலைப்பில் இப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் அச் செயலகத்தில் "முரண்பாடுகளை தீர்த்தலும் சமாதானம் ஏற்படுத்தலும்" என்ற தலைப்பில் இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி நெறி நடத்தப் பட்டது.

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினரின் திருக்குறள் மாணவர் மட்டப்போட்டிக்கு விண்ணப்பிக்குக!

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கிடையில் ஆண்டுதோறும் நடாத்தப்பெறும் திருக்குறள் தமிழ்இலக்கியத் திறன் தேர்வு, கலைத்திறன் போட்டிகளுக்கான சுற்றறிக்கையும் வேண்டுகைப் படிவங்களும் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இத்தேர்வுக்கான வேண்டுகைகள் அனுப்ப வேண்டிய இறுதி நாள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆகும்.

இந்தப் போட்டிக்கான வேண்டுகைகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவர்களிடம் உரிய நாளுக்கு முன்பு கையளிக்குமாறு கிளிநொச்சித் தமிழ்ச்சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை வேண்டியுள்ளார்.

(சோ)

## கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் சட்ட விரோத நடவடிக்கையைக் கைவிடுக!

(முள்ளியவளை)

கரைத்துறைப் பற்று பிரதேசத்தினுள் அனுமதி இன்றி கல், மணல் கிரவல் ஆகியன ஏற்றுவதை கரைதுறைப்பற்று பிரதேச சபை தடை செய்துள்ளது.

குறிப்பாக பிரதேச சபை முள்ளியவளை உப அலுவலகத்தினால் விளம்பரம் மூலம் பிரதேசத்தில் அனுமதி இன்றி கல், மணல், கிரவல் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் சட்டத்தை மீறி அனுமதி இன்றி ஏற்றுபவர்கள் வாகன உரிமையாளர்கள் மீது தீவிர சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## -மருதங்கேணி உ. அ. அ பணிமனைக்கு-
## தொழில் நுட்ப உத்தியோகத்தரை நியமிக்க வலியுறுத்து

(வடமராட்சி)

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாததினால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது பருத்தித்துறையிலிருந்து பதில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் தான் வந்து வேலை செய்து வருகின்றார். . தற்போது சுனாமியினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அரசினால் ஒரு வருடச் சம்பளம் வட்டி இல்லாத கடனாக வழங்க இருக்கின்றது. அதற்கான சொத்து அழிவுகள் அரசால் கோரப்படுகின்றது. அதன் படி அரச ஊழியர்களின் இழப்புகள் தொடர்பான விபரங்களை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாத நிலையில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த அரச ஊழியர்கள் கடும் விசனம் அடைந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் தாம் உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சென்று திரும்புவதாகவும் உடனடியாகப் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்குத் ஒரு நிரந்தர தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிக்கும் படி யாழ். அரச அதிபரைச் வடமராட்சி கிழக்கு மக்கள் வேண்டி நிற்கின்றனர். (11)

## ஈழத்தமிழர்களை தாயகம் அழைத்து வந்த 3 இந்திய படகோட்டிகளுக்கு விளக்கமறியல்

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிவந்ததாகக் கூறப்படும் மூன்று இந்திய மீனவர்களை மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம் அப்துல்லா ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் மூவரும் இராமேஸ்வரத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிசார் தெரிவித்தனர். இந்திய மீனவருக்கு உதவியாக செயற்பட்டதாகக் கூறப்படும் உள்ளூர் மீனவர் ஒருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் ஓட்டி வந்த படகு நீதிமன்ற உத்தரவின் பேரில் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் கூறினார். தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த 17 ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் இலங்கைக் கடற்பரப்பில் காணப்பட்ட இந்திய இழுவைப்படகொன்றை சோதனையிட்ட போதே இலங்கைத் தமிழ் அகதிகள் ஏற்றிவரப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. படகிலிருந்து நான்கு படகோட்டிகள் மற்றும் ஒன்பது இலங்கைத் தமிழ் அகதிகளை கைது செய்த தலைமன்னார் பொலிசார் தம்மிடம் ஒப்படைத்ததாகவும் பின்னர் இவர்களது சொந்த இடமான யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட சிவில் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் இலங்கைத்தமிழ் அகதிகளை இந்திய மீனவர்கள் தலைமன்னார், பேசாலை பகுதிகளுக்கு ஏற்றிவருவது வழக்கம் இருந்த போதிலும் பல மாதங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக மூன்று இந்திய மீனவர்கள் இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரிடம் சிக்கியுள்ளனர்.

## தவறாது பங்கேற்க அழைப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைக்கான ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மல்லாவி அரசியல்துறை செயலக பாரதி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லை. மாவட்ட தே.எ.பே உறுப்பினர் தூயவன் தெரிவித்துள்ளார். (24)

## துப்பாக்கிச் சூடு நடத்திய புளொட் உறுப்பினர் தலைமறைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலைய தொழிலாளி ஜெயராஜா ராஜு மீது வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக புளொட் உறுப்பினர் ஒருவர் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றார். காயமடைந்த குறிப்பிட்ட நபர் பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தன்னைச் சுட்டவர் புளொட் உறுப்பினர் அலன் என உறுதிபடத் தெரிவித்துள்ளார். இவரது வாக்குமூலத்தையடுத்து புளொட் உறுப்பினரான அலன் என்பவர் தற்போது தலைமறைவாகியுள்ளார். இவரைத் தேடும் நடவடிக்கைகளில் மட்டக்களப்பு பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.



கிர்ஜிஸ்தானில் சனாதிபதிக்கெதிராக எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் கிர்ஜிஸ் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.


# ஈராக் போர் எதிர்ப்புப் பேரணிகள் அமெ, ஐரோப்பாவிலும் நடந்தன

(நியூயோர்க்)

அமெரிக்காவிலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் ஈராக் போருக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றுள்ளன.

மத்திய லண்டனில் 45 ஆயிரம் எதிர்ப்பாளர்கள் மாதிரி சவப்பெட்டியுடன் ஊர்வலமாகச் சென்றனர். ''ஈராக்கிலிருந்து ராணுவத்தை திரும்பப்பெற வேண்டும்'' என்று குரல் எழுப்பினர்.

இத்தாலியில் ரோம் நகரில் பத்தாயிரம் பேர் பங்கு கொண்ட பேரணி நடந்தது. துருக்கில் இஸ்தான்புல் நகரில் நடந்த பேரணியில் பத்தாயிரம் பேர் கலந்துகொண்டனர். அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கு கொண்ட பேரணி நடந்தது. இதில் 36 பேர் கைது செய்யப்பட்டனர். நியூயோர்க் நகரின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோல பேரணி நடந்தது. சிக்காகோ நகரில் அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது.



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் கொண்டலிசா ரைஸிற்கும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நேற்று சீனத்தலைநகர் பீஜிங்கில் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது-அணுவாயுத பரவல் தடைகுறித்த பேச்சுவார்த்தையில் வடகொரியாவைக் கலந்துகொள்ளச் செய்ய சீனா முயற்சிக்க வேண்டுமென கொண்டலிசாரைஸ் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

# ஆப்கானிஸ்தானில் வெள்ளப்பெருக்கு

# 200 பேர் பலி ; ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடும் மழையாலும், பனி உருகி ஓடியதாலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இருநூறு பேர் பலியாகியுள்ளனர். ஆயிரக் கணக்கான வீடுகள் இடிந்து விழுந்தன.**

வெள்ளத்தால் உருஸ்கான் பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உருஸ்கான் மாநிலத்திலுள்ள டேக்ராவுட் மாவட்டத்தில் ஹெல்மாண்ட் ஆறு அணையை உடைத்துக்கொண்டு ஊருக்குள் புகுந்தது. ஆடு,மாடுகளையும் அடித்துச் சென்றது. வெள்ளத்தில் சிக்கித் தத்தளித்த மக்களில் பலர் அமெரிக்க ராணுவ உலங்குவானூர்திகள் மூலம் மீட்கப்பட்டனர். இருந்தும் வெள்ளத்தில் மூழ்கி இருநூறு பேர் பலியாகி யுள்ளனர். இதில் பெண்களும், குழந்தைகளுமே அதிகமாகும்.

மேலும் இந்த வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளன. இவர்கள் அங்கு உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதோடு, கடும் குளிரால் அவஸ்தைப் படுகின்றனர் இவர்களுக்கு அமெரிக்க ராணுவத்தினர் உலங்கு வானூர்திகள் மூலம் உணவுப் பொட்டலங்களையும், போர்வைகளையும் போட்டு வருகின்றனர்.

சில கிராமங்கள் நீரால் சூழப்பட்டு ஏனைய பகுதிகளுடனான தரைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்கள், மின்சாரம், தொலைத்தொடர்பு பெரும்பாலான இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன.

# குண்டு வெடிப்பைக் கண்டித்து சுனி முஸ்லிம்கள் வீதி மறியல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் சுனி முஸ்லிம்களின் மசூதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பைக் கண்டித்து நேற்று சுனி முஸ்லிம்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியலில் ஈடுபட்ட மக்கள் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

சுனி முஸ்லிம்களின் மறியல்போராட்டத்தையடுத்து அந்தப் பகுதிக்கு கூடுதல் இராணுவம் அனுப்பப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதேவேளை இந்தக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்வடைந்துள்ளது. குண்டு வெடித்த இடத்திலிருந்து பொலிசார் வெடிக்காத குண்டு ஒன்றையும் மீட்டுள்ளனர்.

# சுரங்கத்தில் வெடிவிபத்து சீனா-ஷான்சியில் 59 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் ஷான்சி மாநிலத்தில் ஷுஷு நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 59 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். பத்துப் பேர் சுரங்கத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். எட்டு மீட்புக் குழுக்கள் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்த ஒரு வாரத்தில் மட்டும் மூன்று நிலக்கரி சுரங்கங்களில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 94 பேர் பலியானார்கள்.

இந்த நிலக்கரிச் சுரங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருந்ததால் சுரங்கத்தை மூடிவிடும் படி பொலிசார் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தனர். இதையும் மீறி இந்த நிலக்கரிச்சுரங்கம் செயற் பட்டதால் அதன் உரிமையாளர்கள் நான்கு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். சீனாவில் அண்மைக் காலமாக பாதுகாப்புக் குறைபாடுகளினால் சுரங்கவிபத்துக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் உள்ள கீ வெஸ்ட் நகரில் சங்கு ஊதும் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. 40 பேர் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். நீண்ட நேரம் ஊதுவது, சத்தமாக ஊதுவது புதுமையாக ஊதுவது ஆகிய பிரிவுகளின் கீழ் இந்தப்போட்டி நடந்தது.

# வடகொரியாவைத் தாக்கமாட்டோம் அமெரிக்கா அறிவிப்பு

(சியோல்)

நேற்று முன்தினம் தென்கொரியா சென்றஅமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் செயலர் கொண்டலிசாரைஸ், வடகொரியா மீது போர் தொடுக்கும் எண்ணம் இல்லை. நாங்கள் தாக்குதல் நடத்துவோம் என்று வடகொரியா கவலைப்பட வேண்டாம் என்று அந்த நாட்டு நிருபர்களிடம் அறிவித்தார்.

வடகொரியா அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தை கைவிட்டுவிட்டு பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அவர் தென்கொரியா சனாதிபதி ரூமூ ஹியூனைச் சந்தித்துப் பேசினார்.



இந்தோனேஷியாவிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகத்தின் மீது கடந்த வருடம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வெடி பொருட்களை எடுத்துச்செல்ல உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இஸ்லாமியத் தீவிரவாதி ஒருவர் இந்தோனேஷியப் பொலிசாரால் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

# தொழிலாளர் தட்டுப்பாட்டை சமாளிக்க 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பல்வேறு வேலைகளுக்கு தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளதால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து நான்கு இலட்சம் பேர் மலேசியா சென்று வேலை செய்ய அனுமதிக்கப்பட இருக்கிறார்கள்.

மலேசியாவில் சட்டபூர்வ அனுமதி இல்லாமல் கள்ளத்தனமாகக் குடியேறி வேலை பார்த்த வெளிநாட்டுத் தொழிலாளர்களை அந்த நாட்டு அரசு வெளியேற்றிவிட்டது. இதனால் அங்கு உணவகங்கள், கட்டுமான பணியிடங்கள், மலையகத் தோட்டங்கள் ஆகியவற்றில் வேலையாட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தத் தட்டுப்பாடு காரணமாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து நான்கு இலட்சம் ஆட்களை வேலைக்கு எடுக்க மலேசியா திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டமாக பாகிஸ்தானில் இருந்து ஒரு இலட்சம் பேருக்கு வேலை கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை, மியான்மார், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், அவசரமாகத் தேவைப்படும் குறிப்பிட்ட துறைகளில் பணியாற்ற அனுமதி வழங்கப்படும் என்று மலேசிய மனிதவள மந்திரி பாங்க்சான் ஆன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது; இந்தியத் தொழிலாளர்கள் சமையல் வேலையிலும், இலங்கைத் தொழிலாளர்கள் தோட்ட வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பொது வேலைகளைச் செய்யவும் ஆட்கள் இந்தியா, நேபாளம், மியான்மாரில் இருந்து கொண்டு வரப்படுவார்கள் என்றார்.

### கட்டாரில் குண்டுத்தாக்குதல் ஒரு பிரி.பிரஜை பலி; 12 பேர் காயம்

(டோஹா)

கட்டார் நாட்டில் முதல் முறையாக தற்கொலைப்படைத் தாக்குதல் நடந்துள்ளது. தலைநகர் டோஹாவில் உள்ள ஒரு பிரிட்டிஷ் பாடசாலை அருகே நாடக அரங்கு இருந்தது. அந்த அரங்குக்குள் இருந்த ஒரு தீவிரவாதி, காரில் பொருத்தியிருந்த குண்டை வெடிக்கவைத்தார். இதில் நாடக அரங்கு இடிந்து விழுந்தது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் பலியானார். 12 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் நடந்தபோது, ஒரு ஆங்கில நாடகம் நடந்து கொண்டிருந்த அண்டை நாடான சவுதி அரேபியா, குவைத் ஆகியவற்றில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய போது கூட கட்டார் அமைதியான நாடாகத் தான் திகழ்ந்தது. இப்போது அங்கும் குண்டுவெடிக்கத் தொடங்கியுள்ளது.

# ஒஸ்லோவில் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு

# கலைஞர்கள் பங்கேற்ற மாபெரும் எழுச்சி நிகழ்வு

விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் "தாயக விடுதலைப் பறவை



களின்" 19 கலைஞர்கள் சங்கமத்துடன் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இவ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அகவணக்க நிகழ்வுடன் ஆரம்பமான இந் நிகழ்வில், தாயக விடுதலை கானங்கள் முதலில் இசைக்கப்பட்டன. தொடர்ந்து பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் "சூரிய தேவியின் சோகங்கள்", புதுவை அன்பனின் நெறியாள்கையில் "கரைதேடும் ஓடங்கள்", ஆகிய இரண்டு நாடகங்கள் அரங்காற்றுகை செய்யப்பட்டன.

இந்நாடகங்களும் கலைஞர்களுடைய கலை ஆளுமை, நோர்வே வாழ் தமிழ் மக்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன.

பாலா ஆசிரியரின் "சூரிய தேவியின் சோகங்கள்'' நாடகத்தில் சமாதானம் நீதிமன்றில் நிறுத்தப்படுகின்றது. சமாதான வயலின் அறுவடை என்ன?, உலக வரலாற்றில் சமாதானம் என்ற பதம் சாற்றி நிற்கும் உண்மைகள் யாவை?, சமாதானத்திற்கு தமிழர்கள் வழங்கும் தீர்ப்பு என்ன? என்பன போன்ற தொக்கி நிற்கும் வினாக்களுக்கு விடை தேடுகின்றது.

தமிழீழ மண்ணோடும் மக்களோடும் பின்னிப் பிணைந்த உண்மை உணர்வுகளாக புதுவை அன்பனின் "கரைதேடும் ஓடங்கள்'' அரங்க ஆற்றுகை பதிவாகியுள்ளது.

இலங்கைத்தீவில் [illegible]டிய போர் எதனால் மூண்டது? தமிழ[illegible] போரைத் திணித்தவர் யார்? எங்க[illegible] சுமந்த அவலங்கள், தாங்கிய இன்னல்கள், இவற்றையெல்லாம் தாண்டிய எழுகை, எழுகையினூடு பெற்ற பலம் என்று தமிழீழ விடுதலைப்போராட்டத்தி[illegible]ார் மீக நியாயத்தை ஆழமாகச் சித்தரிக்[illegible]து "கரை தேடும் ஓடங்கள்''.

பல நுணுக்கமான பரிமாணங்களுடன் பிரமாண்டமான முறையில் இரண்டு அரங்க ஆற்றுகைகளும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு, சிறப்புரை என்பன இடம்பெற்றன. தாயகக் கலைஞர்களுக்கு பொறுப்பாளராக இருந்து வழி நடத்தி வரும் போராளி செல்வம் மாமா சிறப்புரை ஆற்றினார்.



எந்த சக்தியாலும் தமிழீழப் போராட்டத்தை நசுக்க முடியாது. தேசம் விரைவில் விடியும் என்று தனதுரையில் தெரிவித்த செல்வம் மாமா, ஆழிப்பேரலை தமிழர் தாயகத்தைத் தாக்கிய போது தமிழீழ மக்களுக்கான உயிர்காப்புப் பணிக்கான நிதிசேகரிப்பில் முனைப்போடு ஈடுபட்ட அனைவருக்கும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு தேசியத்தலைவர் அவர்களின் நன்றித் தகவலை தெரிவித்தார்.

"சுதந்திர தாகம் சுமந்து வந்து வெண்பனி தேசத்தில் கலை விதைத்துச் செல்லும் தாயக விடுதலைப் பறவைகள் கலைஞருக்கு நன்றிகள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட நினைவுக்கேடயம் வழங்கி கலைஞர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

தமிழர் கலை பண்பாட்டுக்கழகத்தின் நோர்வே பொறுப்பாளர் வே.இராஜரட்ணம் கலைஞர்களுக்கு நினைவுக்கேடயம் வழங்கி கௌரவித்தார்.

இந்தக் கலைஞர்கள், தெருவெளி நாடகங்கள் மூலம் தமிழீழத்தின் மூலை முடுக்கெங்கும் மிதி வண்டிப் பயணம் மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கும், படைப்பலத்தின் பெருக்கத்திற்கும் காத்திரமான பங்காற்றி யவர்கள். இன்னல்கள் சூழ்ந்த, நெருக்கடிகள் நிறைந்த காலங்களில் தமிழீழ மக்கள் மனங் களில் விடுதலைத் தாகத்தினை விதைத்து, அம்மக்கள் மத்தியில் கொள்கைப்பற்றினை ஊட்டிய பெருமை இவர்களைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

---



# தாங்கிக் கட்டுமானம் பூர்த்தி நீர் விநியோகம் எப்பொழுது?


புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தும் இன்னும் புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகள் மந்த கதியிலேயே நகர்ந்து செல்கின்றன. எனினும் இந்தச் சமாதான காலத்திலே யுத்தத்தினால் அழிவுக்குள்ளாக்கப்பட்ட அவசிய தேவைகளுக்கான சில கட்டுமானங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நீர்தாங்கி முக்கிய இடம்பெறுகிறது.

போர் ஓய்வுக்கு வந்த பின் கிளிநொச்சி நகரம் சனத்தொகை அதிகரித்தும், வியாபார நிலையங்கள், அரச அலுவலகங்கள் என்பன அதிகரித்தும் வன்னிப்பகுதியின் கேந்திர முக்கியத்து வமான ஒரு நகரமாக மாறிக்கொண்டு வருகின்ற வேளை, மீள் கட்டுமானப் பணிகள் நடைபெற்றாலும் சில முற்றுப் பெற்ற நிலையிலும், பல முற்றுப்பெறாத நிலையிலும் உள்ளன. அந்த வகையிலே கிளிநொச்சி மத்திய நகர்ப் பகுதியில் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் ஒரு மில்லியன் லீற்றர் கொள்வனவு கொண்ட நீர் சேமிப்புத்தாங்கி ஒன்று கட்டப்பட்டு கட்டுமானப்பணிகள் நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது. ஆனால் இதற்கான நீரை கிளிநொச்சி குளத்திலிருந்து பெறவேண்டிய தேவை இருக்கின்றது. இந் நீர்த் தாங்கியூடான நீர் விநியோகம் குறித்து நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரிடம் கேட்டோம். இது குறித்து அவர் தகவல் தருகையில்:

கிளிநொச்சிக்குளம் தற்பொழுது ஒரு மாசு படிந்த குளமாகவே காட்சி தருகின்றது. இந்த மாசு படிதலுக்கான முக்கிய காரணமாக கிளிநொச்சி நகரப்பகுதியிலுள்ள குப்பை கூழங்களை அகற்றி கிளிநொச்சிக்கு அப்பாலுள்ள மேட்டுநிலமான கொக்காவில் பகுதிகளில் கொட்டி வருதல் அமைகின்றது.

இந்தக்கழிவுகள் வெட்டிப் புதைக்கப்படவோ அல்லது எரியூட்டப் படாமலோ இருப்பதால் அது மழைகாலத்தில கிளிநொச்சிக் குளத்தை வந்தடைகிறது. இதனை எல்லாம் முற்றாக [illegible]ந்தி பின்பு இக்குளம் ம[illegible]ின் பாவனையிலிருந்து முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும். இதை விட வேறு வழிகளிலும் மாசு படாது இக்குளம் பாதுகாக்கப்படவேண்டும். குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு சுத்தமாக்கப்பட்ட பின்பே குளத்து நீரை குழாய்கள் மூலம் எடுத்து பெரியதொரு தொட்டியில் சேமித்து வடிகட்டி இரசாயன பொறிமுறைகள் மூலம் சுத்திகரிக் கப்பட்டு மாசற்ற நீராக இன்னோர் தொட்டிக்கு மாற்றப்பட்டும் அங்கு நீரின் கொள்ளளவுக்கு ஏற்ற வகையில் குளோரின் இடப்பட்டு தூயநீராக் கப்பட்டு குழாய்கள் வழியாக காக்கா கடைச்சந்திக்கு அருகாமையில் அமைக்கப்படும் பெரிய நீர்த்தாங்கியில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து குழாய்கள் ஊடாக மக்கள் பாவனைக்கு நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. கிளிநகர் பகுதியை அண்டியும் பரந்தன் நகர்ப்பகுதியை அண்டியுமே இந்த நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

காலப் போக்கில் இந்த நீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டு ஏனைய பகுதிகளுக்கும் குழாய்கள் பொருத்தப்பட்டு குழாய்கள் ஊடாக நீர் விநியோகம் செய்யப்படும்.



பரந்தன் பகுதியில் அமைக்கப்படும் நீர்த்தாங்கி

இதில் பரந்தன் பகுதியில் நீர் விநியோகம் செய்வதற்கு பரந்தன் நகரப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 91000 லீற்றர் கொண்ட நீர்த்தாங்கிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள நீர்த்தாங்கியில் இருந்தே குழாய்கள் ஊடாக அனுப்பப்படவுள்ளது. நீரைச் சேமித்து அப்பகுதியில் அண்டிய பகுதிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. காலப் போக்கில் இந்த நீர் விநியோகம் வரட்சியான கிராமங்களுக்கு அதாவது பூநகரியை அண்டிய பகுதிகளுக்கும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் அறவிடப்படும். வீட்டுப்பாவனை, மத வழிபாட்டுத்தலங்கள் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றுக்கு நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது எனத்தெரிவித்தார்.

இராணுவ ஆக்கிரமிப்பின் முன்பு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் கிளிநகர் பகுதி களுக்கு நீர் விநியோகம் செய்யப்பட்டது. யுத்தத்தின் கொடூரத்தால் கிளிநொச்சி நகர்ப் பகுதிகளில் உள்ள கட்டடங்கள், குடிமனைகள் என சிதைக்கப்பட்டு துடைத்தழிக்கப் பட்டபின் மீண்டும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே இந்த தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படும் குழாய் நீர் விநியோ கப்பணி கிளிநொச்சி நகர மயமாக்கல் திட்டத்திற்கு முக்கியம் வாய்ந்த ஒரு செயற்பாடேயாகும். எனினும் எப்பொழுது பூரணமாக செயற்பட ஆரம்பிக்கும் என்பதே கேள்வியாகும்.

**வீ.பிரதீபன்**




# முடிவுகள் தனித்துவமானவை



கிரிக்கெட்டைப் பொறுத்து இன்னது தான் நடக்கும் என்று அறுதியிட்டு கூறி விட முடியாது.

இதற்கு அண்மையில் பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையில் நிறைவடைந்த மொகாலி, கொல்கத்தா டெஸ்ட் போட்டிகளைப் பிந்திய உதாரண மாகக் கொள்ளலாம்.

ஆருடங்களும், எதிர்வு கூறல்களும் சில வேளைகளில் சாதகமான முடிவுகளை தந்தாலும் நூற்றுக்குநூறு வீதம் உண்மையானது என்று வாதாட எவரும் முன் வருவார் களேயானால் அது முட்டாள் தனமான முடிவாகவே இருக்கும்.

ஏனெனில், மொகாலி டெஸ்ட் போட்டியில் போட்டியின் இறுதி நாளில் நான்கு விக்கெட்டுக்கள் மீதமுள்ள நிலையில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் விரைவாக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடையுமென அனைவரும் எதிர்பார்க்க, ஏழாவது விக்கெட் இணை அபாரமாக ஆடி போட்டி முடிவையே மாற்றி அமைத்தது. இது அப்போது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

இது இவ்வாறிருக்க கொல்கத்தா டெஸ்ட் போட்டி ஆரம்ப நாளிலிருந்து பரபரப்பு நாணயச்சுழற்சியில் வெற்றி பெறும் அணிக்கேவெற்றி. அது தான் நடந்தது. ஆனால், பாகிஸ்தானும் இந்தியாவுக்கு நிகரான ஓட்டத்தை குவித்ததால் வெற்றி பாகிஸ்தான் பக்கம் சாய்ந்து விடுமோ என்ற ஏக்கம் இந்திய அணியையும், ரசிகர்களையும் விட்டு வைக்கவில்லை.

இதற்கு ஏற்றாற்போல் இரண்டாவது இனிங்சில் இந்திய அணி குறைந்த ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்து அதிர்ச்சி அளித்தது. பின்னர் சுதாகரித்து ஆடி ஓட்டங்களைக் குவித்து இறுதியில் 422 என்ற வெற்றி இலக்கானது பாகிஸ்தானுக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆட்டத்தை ஆரம்பித்தது. பாகிஸ்தான் அதிர்ச்சி, ஆச்சரியம். வெற்றி இலக்கை அடைந்துவிடுவார்களோ இந்திய வீரர்களிடையே ஒருவித ஏக்கம்.

ஒரு விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களுடன் பாகிஸ்தான் இறுதி நாளை ஒன்பது விக்கெட்டுக்களுடன் சந்திக்கப் போகிறது. மொகாலியில் நான்கு விக்கெட்டுக்களுடன் அந்த ஆட்டம் ஆடியது. இது எப்படி அமையப்போகிறதோ என கிரிக்கெட் ரசிகர்கள் அலசிக்கொண்டிருக்க பரிதாபம் பாகிஸ்தான் படுதோல்வியைச் சந்தித்துவிட்டது. எனவே ஆருடங்களுக்கும், எதிர்வு கூறல்களுக்கும் அப்பாற்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.


மொத்தத்தில் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதாக மாறும் போது எந்தவொரு முன்னணி துடுப்பாட்ட வீரராலும் நிலைத்து நிற்க முடியாது என்ற முடிவுக்கு வருவதே பொருத்தமானது.

சர்வதேச கிரிக்கெட்டின் பொற் கோயிலாக லண்டனிலுள்ள லோட்ஸ் மைதானம் மதிக்கப்படுகின்றது.

வடக்கு லண்டனிலுள்ள ஜோனஸ்வூட் சுரங்க ரயில் நிலையத்திற்கு அண்மையில் காணப்படும் இம்மைதானம் அனைத்து பெருமைகளையும் உள்ளடக்கிய ஒரு நூதன சாலையாக கணிக்கப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமைக் காரியாலயம் அமைந்திருப்பதும் இம்மைதானத்திலேயே. அது 96 வருட சேவையை பூர்த்தி செய்துள்ளது. அந்தக் கிரிக்கெட் சபை காரியாலயமும் தனது சேவையில் சதமடிக்கும் நிலையை அண்மித்து இருந்தது.

இந்நிலையில் இந்: சதமடிக்கும் பெரு



## புகழ் மங்கப்போகுமா?

மையை லோட்ஸ் மைதானம் இழந்து விட்டது. காரணம் சர்வதேச கிரிக்கெட்சபை காரியாலயம் மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு, ஐக்கிய அரபு எமிரேட். அதாவது டுபாய் நோக்கி நகர்த்தப்படுகின்றது. அத்துடன் வரும் ஓகஸ்ட் மாதம் முதல் அங்கிருந்து தமது சேவையை ஆற்றும்.

இதனால் இங்கிலாந்திலுள்ள கிரிக்கெட் ரசிகர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். வெள்ளையர்களின் விளையாட்டு என்ற பெருமையும் அத்துடன் மறையும் நிலை தோன்றியுள்ளது.

மேற்படி அலுவலகம் டுபாயிலுள்ள விளையாட்டு நகரம் என வர்ணிக்கப்படும் இடத்துக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. இங்கு சர்வதேச கிரிக்கெட் பயிற்சி நிலையமும் இயங்கவுள்ளதாக தெரியவருகிறது.

டுபாய் நகரைச்சர்வதேசப் புகழ் வாய்ந்த ஒரு நகரமாக்குவதே இதன் நோக்கம். இதன் பின்னணியில் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவரும், பாகிஸ்தான் பிரஜையுமான ஈசான் மணியும், சார்ஜா கிரிக்கெட் மைதானத்தின் உரிமையாளரான அப்துல் ரகுமான் புகதிரும் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் லோட்சிலுள்ள பெறுமதிமிக்க நூலகமும் நூதனசாலையும் தமது பெருமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. லோட்ஸ் மைதானத்துக்கு 200 வருட கால வரலாற்று சிறப்புக் காணப்படுகின்றது. லோட்ஸ் மைதானம் மெல்பேர்ன் கிரிக்கெட் சபைக்குச் சொந்தமானதாகும். அது அடிக்கடி மூன்று முறை இடம்மாறியுள்ளது. உலகிலுள்ள அனைத்து வீரர்களும் இம்மைதானத்தில் ஒரு போட்டியிலாவது பங்கேற்க வேண்டும் என்ற ஆவலுடன் இருக்கிறனர். ஆயினும் இங்குள்ள சர்வதேச கிரிக்கெட் சபை இடம் மாறுவதுடன் அவர்களின் கனவும் மறைந்து விடப்போகின்றது.


**வடிவேல்**

## வானமே எல்லை

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை கடந்துள்ளார்.

இவரின் சாதனைப் பயணம் மிக நீண்டது. 13 வயதில் பாடசாலை போட்டியில் சாதிக்க தொடங்கியதில் இருந்து இன்று வரை சோதனைகள், வேதனைகள் நிறைந்ததாக இருந்தாலும் நட்சத்திர வீரராகவே திகழ்கிறார்.

1986ஆம் ஆண்டு பாடசாலை போட்டி ஒன்றில் அவரது சக நண்பர் கம்பிளியுடன் இணைந்து 664 ஓட்டங்களை சேர்த்தார். இதில் சச்சின் 326 ஓட்டங்களைப் பெற்றார்.



இதனால், இந்தியாவின் முதல்தர போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு சச்சினுக்கு மிக விரைவாகக்கிடைத்தது. அதிலும் அசத்தலான தொடக்கம் தான். ரஞ்சி கோப்பை, துலீப் கோப்பை மற்றும் இரானி கோப்பை மூன்றிலும் முதல் போட்டியிலேயே சதமடித்தார். இந்த சாதனையை இந்திய வரலாற்றில் எந்த வீரரும் முறியடிக்கவில்லை.

இதனால், 1989ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு சச்சினுக்கு கிடைத்தது. பாகிஸ்தானுக்கு எதிராக 16 வயதில் பங்கேற்றார். அப்போது வாசீம் அக்ரம், வக்கார் யூனிஸ், இம்ரான்கான் போன்ற வேகப் பந்து வீச்சாளர்களை சமாளித்து முதல் அரைச்சதத்தைப் பெற்றார்.

1990ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக முதல் டெஸ்ட் சதத்தைப் பெற்றார். 1992 சிட்னியில் நடந்த டெஸ்ட் போட்டியில் 148 ஓட்டங்களைப் பெற்று குறைந்த வயதில் அவுஸ் மண்ணில் சதமடித்த முதல் வீரர் என்ற பெருமையைப்பெற்றார்.

1994இல் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் ஆரம்ப வீரராக களமிறங்கிய சச்சின் 49 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பெற்று இந்தியாவை வெற்றிபெறச் செய்தார். இதிலிருந்து தொடக்க ஆட்டக்காரர் இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

1998இல் டாக்காவில் நடந்த மினி உலகக் கிண்ணப் போட்டியில் சதமடித்த சச்சின் ஹெய்ன்சின் அதிக சதம் சாதனையை (17) முறியடித்தார்.

1999இல் இங்கிலாந்தில் நடந்த உலக கோப்பை தொடரிலும் சச்சின் பிரமாதமாக ஆடி உலகக் கோப்பை வரலாற்றில் 1000 ஓட்டங்களைக் கடக்கும் மூன்றாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இப்போது அவரே உலகக்கிண்ண போட்டியில் அதிக ஓட்டம்பெற்ற வீராகத்திகழ்கிறார்.

டெஸ்ட்டில் சச்சினுக்கு இரட்டைச்சதம் அடிக்க 71 போட்டிகள் தேவைப்பட்டது. நியூசிலாந்துக்கு எதிராக முதலாவது இரட்டைச் சதத்தைப் பெற்றார். பின்னர் ஐதராபாத்தில் நடந்த ஒரு நாள் போட்டியில் அதே அணிக்கு எதிராக தனது அதிக பட்சமான ஒரு நாள் ஓட்டத்தை (186) பெற்றார்.

2003 இல் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு நாள் போட்டியில் 37ஆவது சதத்தைப் பெற்றார். 2004இல் பங்களாதேசுக்கு எதிராக சதமடித்த சச்சின் டெஸ்ட் போட்டியில் கவாஸ்கரின் 34 சதம் என்ற சாதனையை சமன் செய்தார்.

இந்த நீண்ட சாதனை பயணத்தில் தற்போது நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் டெஸ்ட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை தொட்ட சச்சின் 35ஆவது சதத்தைப் பெற்று சாதனை படைக்க ஆவலாகவுள்ளார்.

## புரட்சி வீரரின் அதிர்ச்சி முடிவு

கிரிக்கெட்டில் சிலர் சாதனைக்காக விளையாடுகிறார்கள். சிலர் அணிக்காக தங்களை அர்ப்பணிக்கிறார்கள். இதில் இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவர்தான் அவுஸ்திரேலியாவின் 34 வயதுடைய



கில்கிறிஸ்ட்.

விக்கெட் காப்பாளராக மகத்தான புரட்சி செய்து கொண்டிருக்கிறார். முன்னர் எல்லாம் விக்கெட் காப்பாளராக இருப்பவர் துடுப்பாட்டத்தில் பிரகாசித்தால் கூடுதல் பலமாக கருதப்பட்டது.

இப்போதோ துடுப்பாட்டம் தெரிந்த காப்பாளருக்கே வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இந்தமாற்றத்துக்கு கில்கிறிஸ்டும் ஒருகாரணம்.

டெஸ்ட் போட்டிகளில் ஏழாவது வீரராகக் களமிறங்கி கலக்கும் இவர் அணிக்கு பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

உதாரணமாக நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது, இரண்டாவது டெஸ்ட் போட்டிகளை குறிப்பிடலாம். முதல் போட்டியில் ஆறு விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டத்துடன் தவித்த அவுஸ்திரேலியாவை 126 பந்துகளில் 121 ஓட்டம் குவித்து காப்பாற்றிய கில்கிறிஸ்ட் இரண்டாவது டெஸ்டில் 162 ஓட்டங்களை குவித்தார்.

இப்படிப்பட்ட வீரரை எப்படி மறப்பது ஒருநாள் அதிரடியை டெஸ்டிலும் அறிமுகப்படுத்துகிறாரா கில்கிறிஸ்ட் என்று எண்ணத்தோன்றுகிறதல்லவா?

1999 இல் பாகிஸ்தானுக்கு எதிராக அறிமுகமான இவர் தொடர்ந்து 67 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதில் 51, போட்டிகளில் அணி வெற்றி பெற்றுள்ளது என்றார் சிந்தித்துப்பாருங்கள்.

டெஸ்ட் அரங்கில் 15 சதங்கள் 4392 ஓட்டங்கள் குவித்துள்ளார். விக்கெட் காப்பாளராக 256 பிடிகளையும், 27 ஸ்டம் ஆட்டமிழப்புகளையும் செய்துள்ளார். அத்துடன் டெஸ்ட் வரலாற்றில் அதிவேக இரட்டைச் சதம் (212 பந்துகளில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2002ஆம் ஆண்டு பெற்றார்) அடித்து சாதித்துள்ளார்.

ஒரு நாள் அரங்கில் 209 போட்டிகளில் 6,969 ஓட்டங்களைப் பற்றுள்ள கில்கிறிஸ்ட் பத்து சதம் 306 பிடிகளையும் 41 முறை ஸ்டம் அவுட்களையும் செய்துள்ளார்.

ஆட்டமிழப்பு என்றால் உடனே வெளியேறும் இவர் சேவை பணியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சுனாமி கிரிக்கெட் போட்டியின் போது இயற்கை பேரழிவு என்ற குறுகிய கால உதவியோடு நின்றுவிடக்கூடாது. ஆபிரிக்காவில் ஒவ்வொரு நாளும் முப்பதாயிரம் பேர் நோய், உணவு இல்லாததால் மடிகின்றனர். இவர்களுக்கு நீண்டகால அடிப்படையில் உதவ வேண்டுமென கிரிக்கெட் சமூகத்தைக் கேட்டுக்கொண்டார்.

இப்படி மனித நேயத்தில் சிறந்த கில்கிறிஸ்ட் தனது குடும்பத்தோடு அதிக நேரம் செலவிடும் பொருட்டு 2007 உலகக் கோப்பை போட்டியோடு ஓய்வு பெறவிருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு உலகம் முழுவதும் உள்ள அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை தந்தாலும் அவருக்கு என்று ஒரு குடும்பம் இருப்பதை நாம் ஏற்கத்தானே வேண்டும்.

# யாழ்.கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில்
# தெங்குச் செய்கையை ஊக்குவிக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினரால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தென்னந்தோட்டங்களில் இருந்து தேங்காய்களைப் பெற்று நாற்று மேடைகள் அமைத்து அதன் மூலம் தென்னைப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக வடமாகாணத் தென்னைப் பயிர்ச்செய்கை பிராந்திய முகாமையாளர் க.தெய்வேந்திரத்துடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

இது வரை காலமும் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினரால் புத்தளம், குருநாகல் குழியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் இருந்து தேங்காய்கள் தருவிக்கப்பெற்று, கிளிநொச்சி அச்சுவேலிப் பகுதிகளில் நாற்று மேடைகளிட்டு அவற்றினைப் பராமரித்து தென்னம்பிள்ளைகள் முளைகட்டியவுடன் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் உள்ளூரிலுள்ள தென்னந்தோட்டங்களிலிருந்து அதாவது கொடிகாமம், எழுதுமட்டுவாள், உசன், பளை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள தென்னந்தோட்டங்களிலிருந்து தேங்காய்கள் கொள்முதல் செய்யப்பெற்று அதாவது தேங்காய்கள் ஆரம்பத் தெரிவு மேற்கொள்ளப்பெற்று இறுதித் தெரிவு நடைபெற்று அதன் பின்பு கிளிநொச்சி, அச்சுவேலிப் பகுதியிலுள்ள பிராந்தியப் பண்ணைகளில் நாற்று மேடைகள் போடப்பட்டு மக்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவித்தார்.(சோ)

## சுனாமி அனர்த்த அறிவிப்பு
## 30 நிமிடங்களுக்குள் கிடைக்க ஏற்பாடு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்கள் ஏற்படுமானால் 30 நிமிடங்களுக்குள் கடற்கரை பிரதேச மக்களுக்கு அறிவிப்பதற்கு 24 மணித்தியாலங்களும் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் தற்பொழுது கண்டி பல்லேகலவில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையத்தின் ஊடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுடன் உடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை தெரிந்து கொள்ள முடியுமென தொலைத் தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது. (32)

## நுவரெலியா மாவட்டத்தில்
# உருளைக்கிழங்கு பயிரிடும் நடவடிக்கையால் சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல்!

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் ஒருவகை வாடல் நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 500 ஹெக்டேயர் நிலத்தில் இந்த நோய்பரவியுள்ளதாக சிறிலங்கா பசுமை அமைப்பு தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட விதையினங்களை பயிரிட்டமை காரணமாகவே இந்த நோய் பரவியுள்ளதாக விவசாயத் திணைக்களம் கூறுகிறது.

எனினும் இந்த விதையினங்களை விவசாயத்திணைக்களம் பிரிசோதனை செய்திருக்குமாயின் இந்த நோயை முன்கூட்டியே தடுத்திருக்க முடியும் என பசுமை அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் சுமார் 1000 ஹெக்டேயர் தேயிலை நிலம் குத்தகையாளர்களால் உருளைக்கிழங்கு பயிரிடுவற்கு ஏற்ற நிலமாக மாற்றப்பட்டு வருகிறது. இது சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

மண் அரிப்பு நேருவதால் மண்ணில் வளம் குன்றிப் போகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

வலப்பனை மற்றும் அக்கரபத்தனை போன்ற பிரதேசங்கள் இவ்வாறான நிலைக்கு உள்ளாகியுள்ளன. இந்த நிலையில் தேயிலை நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதை எதிர்த்தும் தேசிய உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்க உரிய நடவடிக்கைகள் மேற கொள்ளக் கோரியும் பசுமை அமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளது. (32)

# காதிக் நீதி மன்றங்களை நீதியமைச்சு பொறுப்பேற்கும்!

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தவர்களின் காதிக் நீதிமன்ற செயற்பாடுகளைச் சீர் அமைப்பதற்கான உரிய ஆலோசனைகளை வழங்கும்படி பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நீதிசேவை ஆணைக் குழுவிற்கு பணிப்புரைவிடுத்துள்ளார்.

இதுவரை காலமும் பதிவாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த காதிக் நீதி மன்றங்களை நீதி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது. முஸ்லிம் மக்களின் பிணக்குகள் தொடர்பான சகல வழக்குகளும் காதிக்மன்றினாலேயே தீர்த்து வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# கடந்த ஆண்டு சிறிலங்காவில் 2504 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

நாளொன்றுக்கு ஆறு அல்லது ஏழு பேர்கள் விகிதம் கடந்த வருடம் 2504 பேர் நாட்டில் காணாமல் போயுள்ளதாக சிறிலங்காப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதில் 1421 ஆண்களும், 1083 பெண்களும் உள்ளனர். 18 வயதிற்கு கீழ்பட்ட 231 பெண்களும் காணாமல் போயுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளதுடன் சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நியமனத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

சமுர்த்தி ஆணையாளராக இம் மாதம் 17 ஆம் திகதி ரவீந்திர ஹேவாவித்தாரனை சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னி ஆராய்ச்சியினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு அமைச்சின் செயலாளரினால் நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை. இவர் சமுர்த்தி[illegible] சபையின் சிரேஷ்ட அதிகாரி என்றபடியால் இவர் இப்பதவிக்கு தகுதி அற்றவர் என எதிர்ப்புத் தெரிவித்து நான்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் தங்களின் ராஜினாமாக் கடிதங்களை சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னி ஆராய்ச்சிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# 3412 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் 3412 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் மாசி மாத நிலவர அறிக்கை தெரிவிக்கின்றது.

வெளிநோயாளர் பிரிவில் 2312 பேரும், சாதாரண காய்ச்சலினால் 483 பேரும், குருதிச்சோகையினால் 101 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 57 பேரும் வயிற்றோட்டத்தினால் 47 பேரும், விசர் நாய்க்கடியினால் எட்டுப்பேரும், சிறுசத்திரசிகிச்சைக்காக 48 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையின் மத்திய மகப்பேற்று மனையில் கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 35 கர்ப்பிணித் தாய்மார் அனுமதிக்கப்பட்டு அதில் 13 சிசுப் பிறப்புகள் நிகழ்ந்துள்ளன. (ஆ)

# பிக்கு மாணவர்கள் பகிடிவதையால் பாதிப்பு

(கொழும்பு)

நிட்டம்புவ சாரிபுத்த தேசிய கல்வி பீடத்தில் கல்வி பயிலும் கனிஷ்ட பௌத்த பிக்கு மாணவர்கள் கடும் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாகி 18ஆம் திகதி இரவு வத்துபிட்டிவல அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

கல்விப் பீடத்தின் நிலத்தில் இவர்களை ஊர்ந்து செல்வதற்கும் பாய்ந்து நடப்பதற்கும் பழைய மாணவர்களால் கட்டளை இடப்பட்டது. இவர்களின் காவி உடைகள் யாவும் அகற்றப்பட்டு இந்தப் பகிடிவதை நடத்தப்பட்டுள்ளது. நிட்டம்புவ பொலிசாருக்கு இது சம்பந்தமாக அறிவித்த பிறகு பொலிசார் இவர்களை அழைத்துச் சென்று காவி உடைகளை வழங்கி வைத்தியசாலையில் அனுமதித்தனர். இது சம்பந்தமாக பொலிசார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


நினைவஞ்சலி

1 ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 8ஆம் ஆண்டு | 16ஆம் ஆண்டு



| 1975-01-05 | 1972-12-21 | பிறப்பு | 1977-01-21 | 1967-11-10 |
| 2004-04-02 | 2003-06.18 | இறப்பு | 1997-07-06 | 1989-10-23 |

கிருஸ்ணபிள்ளை விஸ்வலிங்கம் | கிருஸ்ணபிள்ளை விஜயமலர் | கிருஸ்ணபிள்ளை தவமலர் | கிருஸ்ணபிள்ளை புஸ்பமலர்

வீரத்தில் விவேகத்தில் விஜயன்
வெற்றியின் லிங்கம் – என் விஸ்வலிங்கம்
உனக்கு சதிவழியே விதிவந்ததோ? – என்மகனே
வீட்டை வீட்டே எனையகற்றி உன்னைக்காலன் – கவர்ந்தானோ?
எம் மடியில் வீருப்புடனே
விளையாடித்திரிந்த விஜயமலருடன்
தவமலர், புஸ்பமலரையும் கூற்றுவன் கொண்டு சென்றானே
ஐயோ........ கடவுளே நீ எங்கு சென்றாய்?
தாய் மடியில் தவழ்ந்த பிள்ளைகளை
தயவின்றி ஏன்பறித்தாய்? இறைவா?

பிள்ளைகளின் நிழலில் வாழும் காலமதில்
வெண்நெருப்பில் அவர்களை ஏன் எரித்தாய்.
தந்தை கிருஸ்ணபிள்ளையுடன் என்செல்வங்களே
நீங்கள் என்றும் ஆன்மசாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கும்.

தாய் நாகம்மா
சகோதரன் இராசலிங்கம், சகோதரி இராசமலர்,
அண்ணி புறாட்டி, பெறாமக்கள், மருமக்கள்

ஊற்றுப்புலம்,
புதுமுறிப்பு.

(5863)

# சர்வதேச மகளிர் கருத்தரங்கில் ஜெயலலிதாவுக்குப் புகழாரம்

## கல்லூரி மாணவிகள் விசனம்

(புதுடில்லி)

இவ்வருட சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் கருத்தரங்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா புகழ்ந்து பாராட்டப்பட்டார். இதனால் மகளிர் தினத்திற்கு வருகைதந்திருந்த கல்லூரி மாணவிகள் விசனம் அடைந்துள்ளனர். ஜெயலலிதா தொடர்பான மேற்படி கருத்தரங்கில் கட்டாயமாக கலந்துகொள்ளுமாறு கல்லூரிகளின் மாணவ, மாணவியருக்கு வற்புறுத்தப்பட்டிருந்தது. இக்கருத் தரங்கில் பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து மிகவும் பயனுள்ள கருத்துக்கள் வெளியிடப்படும் என கல்லூரிமாணவிகள் காத்திருந்தவேளை, கருத்தரங்கில் பேசிய அனைவரும் ஜெயலலிதாவைப்பற்றியே புகழ்ந்து பேசினர். அவர் திரையுலகில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்து முதல்வராகி தமிழகத்தின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து வருகிறார் எனப்புகழாரம் சூட்டினர்.

இந்த வைபவத்தில் கலந்துகொண்டமையினால் தமக்கு எவ்விதபயனும் கிடைக்கவில்லையெனவும் வழமையாக ஞாயிற்றுக்கிழமையை மகிழ்ச்சியான தாகக்களிக்கும் ஒரு வாய்ப்பும் இழக்கப்பட்டு விட்டதாக மாணவிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

# இந்திராகாந்தியின் சிலை திறந்ததால் பிரச்சினை

தமிழகம் புத்தூர் நால்ரோட்டில் நீண்டகாலமாக திறக்கப்படாமல் இருந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் சிலை திறக்கப்பட்டது குறித்து காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திடீரென சிலை திறக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து பிரச்சினை ஏற்படாவண்ணம் தடுக்க காவல்துறையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் சிலையை நிறுவ காங்கிரஸ் முன்னாள் மாவட்ட தலைவர் கல்யாணராமன் தலைமையில், கூடிய குழு முடிவு செய்தி ருந்தது. திருச்சி புத்தூர் நால்ரோட்டில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சிலை அமைக்கும் பணியைத் தொடக்கினர். கடந்த ஆண்டு சிலை அமைக்கும் பணி நிறைவுற்றும் திறப்பு விழா நடத்தவில்லை காங்கிரஸ் கட்சி தலைவி சோனியாவை அழைத்து வந்து சிலையை திறக்க முடிவு செய்தும், நடக்கவில்லை கடந்த ஒன்பதாம் திகதி காலை மூடிவைக்கப்பட்டிருந்த இந்திராகாந்தி சிலை திறக்கபட்டு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து முழுக்க முழுக்க எனது கட்டுப்பாட்டிலுள்ள இந்திராகாந்தி சிலையை சேவாதள தலைவர் சார்லஸ் மற்றும் காங்கிரஸ் பிரமுகர் அல்லூர் சீனிவாசன் ஆகியோர் திறந்ததாக கூறி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் மாவட்ட தலைவர் கல்யாணராமன், உறையூர் காவல்துறையில் புகார் செய்தார். தொடர்ந்து பிரச்சினை ஏற்படாமல் இருக்க திறக்கப்பட்ட இந்திராகாந்தி சிலை வெள்ளைத் துணியால் கட்டி மறைக்கப்பட்டதுடன், சிலையை சுற்றிலும் கீற்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பிரச்சினை ஏற்படாமல் இருக்க காவல் துறையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

# பீகாரில் மதச்சார்பற்ற அரசு அமையும்!

(மைசூர்)

பீகார் மாநிலத்தில் ராஷ்டிரிய ஜனதாத் தளம்மற்றும் பாரதிய ஜனதா அல்லாத கட்சிகளின் உதவியுடன் விரைவில் புதிய மக்களாட்சி அமையும் என ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

பீகாரில் சனாதிபதி ஆட்சி அமுல் படுத்தப்பட்டதையடுத்து சட்டம் ஒழுங்குகள் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது எனத் தெரிவித்த பஸ்வான் பா.ஜ. கட்சியையோ ராஷ்டிரிய ஜனதாத் தளத்தையோ தாம் ஆதரிக்கப்போவதில்லையென வும், இந்த இரண்டு கட்சிகளும் இல்லாத மதச்சார்பற்ற அரசு ஒன்று அமையும் எனவும் தெரிவித்தார்.அத்துடன் பீகாரிலே ஒரு முஸ்லிம் முதல்வராவதையே தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.


# பொறியியல்,மருத்துவம் ஆகிய துறைகளில் இந்தியாவின் வளர்ச்சியால் அமெரிக்கா அச்சம்!

## மோடிக்கு விசா மறுப்புக் குறித்து அத்வானி

**உள்ளார்ந்த ரீதியில் பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் இந்தியா அடைந்துவரும் வளர்ச்சியால் அச்சப்பட்டே அமெரிக்கா, இந்தியர்கள் மீது சில கட்டுப்பாடுகளைவிதிக்க முற்பட்டிருக்கிறது என பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அகமதாபாத்தில் நடந்த சுயமரியாதைப்பேரணியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அத்வானி மேற்படி கருத்தை வெளியிட்டார். குஜராத் மாநிலமுதல்வர் நரேந்திர மோடிக்கு அமெரிக்கா பயணஅனுமதி (விசா) வழங்க மறுத்தது. இந்தியாவை அவமதித்ததற்குச் சமனாகும். அமெரிக்காவின் இந்தச்செயல் இந்நாட்டு மக்களை ஒன்றுபட்டு போராடவே தூண்டிவிடும். மேலோட்டமாகப் பார்த்தால் இது அற்ப விடயமாகவே தோன்றும். பிரிட்டிஷ் சாம்ராச்சிஜத்துக்கு எதிராக மகாத்மாகாந்தி நடத்திய உப்புசத்தியாகிரகம் முதலில் சாதாரணமானதாகவே இருந்தது. பிறகு அது அந்த சாம்ராஜ்யத்தையே அசைத்துவிட்டது.

இந்த விடயத்தில் இந்தியாவின் அதிருப்தியை நன்கு வெளிப்படுத்தியமைக்காக பிரதமர் மன்மோகன்சிங்குக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மதச்சுதந்திரத்திற்குக் குறுக்கே நின்றதால் மோடி மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அமெரிக்கா கூறுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. மதச் சுதந்திரத்தை உறுதி செய்யும் அரசியல் சட்டம் அமுலாகும் நாடு இந்தியா. இந்தப் பொதுக்கூட்டம் ஒரு ஆரம்ப நிகழ்வு. சுய மரியாதைக்காக இதுபோன்ற கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றார் அத்வானி.



புதுடில்லியில் நேற்று முன்தினம் அனைத்து மாநில சட்டசபை சபாநாயகர் கூட்டம் சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி தலைமையில் லோக்சபாவில் நடைபெற்ற போது!

# சிபுசோரன் மீதான நிலக்கரி ஊழல் விசாரிக்க பாராளு.குழு அமைக்குக!

## ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.கட்சி கோரிக்கை

'சிபுசோரன் மீதான நிலக்கரி ஊழல் முறைப்பாட்டை விசாரிக்க பாராளுமன்றக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்' என்று ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.க வலியுறுத் தியுள்ளது.

செயலாளர் பிரேம் கத்தாருகா பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

மத்திய நிலக்கரித்துறையமைச்சர் என்ற முறையில் சிபுசோரன் கடந்த சனவரியில் 20 லட்சம் தொன் நிலக்கரியைக் குறைந்த விலைக்கு விற்றுள்ளார். கான்பூரில் உள்ள தேசிய நிலக்கரி உபயோகிப்பாளர் கூட்டமைப்புக்குக் குறைந்த விலைக்கு விற்றுள்ளார். நிலக்கரி தேவைப்படும் முக்கிய நிறுவனங்களுக்கு நிலக்கரியை வழங்க வேண்டும் என ஜார்க்கண்ட் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதும், அதை புறக்கணித்துவிட்டு வேறு சிலருக்கு குறைந்தவிலைக்கு நிலக்கரியை விற்றுள்ளார். சந்தை விலையை விட குறைந்தவிலைக்கு நிலக்கரி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் ஊழல் நடந்துள்ளது. தேர்தலுக்கு முன்பாக இதில் கோடிக்கணக்கான ரூபாய் கைமாறி இருப்பதாக சந்தேகப்படுகிறோம்.

இவ்வாறு அந்தக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. கடித பிரதியை கத்தாருகா தொலைநகல் மூலம் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார். டில்லியில் பிரதமரை நேரடியாகச் சந்தித்தும் கொடுக்கவுள்ளார். கடிதப்பிரதிகள் பா.ஜ.க தலைவர் அத்வானி,நிலக்கரிக்கான பாராளுமன்ற நிலைக் குழுத் தலைவர் அனந்தகுமார் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# சட்ட மன்றம்-நீதித்துறைகளின் அதிகாரச் சமநிலை பாதிப்பு

## –உச்சநீதிமன்றத்தலையீடு குறித்த சட்டப்பேரவைத்தலைவர்கள் கருத்து

ஜார்க்கண்ட் மாநில விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போதே சோம்நாத் சட்டர்ஜி மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.சட்ட மன்றங்களுக்கும், நீதித்துறைக்கும் இடையே அதிகாரச்சமநிலையைக் குலைக்கும் வகையில் பிறப்பிக்கப்படும் நீதிமன்ற உத்தரவுகள் குறித்து மாநில சட்டப் பேரவைத் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதன் போது அவர்கள் அரசியலமைப்புச் சட்டம் ஒதுக்கித்தந்துள்ள அதிகார வரம்பை மீறவேண்டாம் என்றும் நீதிமன்றங்களுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.' அண்மையில் நடைபெற்ற ஜார்க்கண்ட் மாநிலசட்டப்பேரவையில் ஆளுநர் குறிப்பிட்டிருந்த திகதிக்கு முன்னதாகவே நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் அவை நடவடிக்கைகளை வீடியோ மூலம் படம்பிடிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்தே சட்டப் பேரவைத்தலைவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்கள் என்ன?, சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் உச்சநீதிமன்றம் உட்பட ஏனைய நீதி மன்றங்கள் தலையிடுவதற்கு அதிகாரம் உண்டா எனவும் , இரு அமைப்புக்களுக்கும் உள்ள அதிகார வரம்புகள் என்ன என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக விவாதிப்பதற்காகவே இம்மாநாட்டை மக்களவைத் தலைவர்கள் ஏற்பாடுசெய்து நடத்தியிருந்தனர்.

# பிரதமர் மன்மோகன்சிங், அத்வானி ஆகியோருக்கு விருது!

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் எல்.கே அத்வானி ஆகியோருக்கு சிறந்த நாடாளுமன்ற வாதி எனும் விருது வழங்கப்படவிருக்கிறது. இந்தியாவின் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் இவர்களுக்கான விருதை வழங்கி வைக்கவுள்ளார்.


1999 ஆம் ஆண்டுக்கான விருது அத்வானிக்கும், 2002 ஆம் ஆண்டுக்கான விருது பிரதமர் மன் மோகன்சிங்கிற்கும் வழங்கப்படவுள்ளது. இத்துடன் மனிதவள ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆர்ஜுன்சிங், மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோருக்கும் "சிறந்த நாடாளுமன்ற வாதி" விருது வழங்கப்படவுள்ளது.

# வெலிங்டன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வலுவான நிலையில் அவுஸ்திரேலியா



நியூசிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையிலுள்ளது.

போட்டியின் நான்காம் நாள் நிறைவில் நியூசிலாந்து தனது முதல் இனிங்சிற்காக 244 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் வின்செண்ட் 63, விக்டோரி 45, கம்பீங் 37 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் வோர்ன், கஸ்பரோவிச் தலா மூன்று விக்கெட்டுக்களையும் , மெக்ராத் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். முன்னதாக அவுஸ்திரேலியா முதல் இனிங்சிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றது.இதன்படி நியூசிலாந்து அவுஸ்திரேலியாவை விட 326 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. போட்டியின் இறுதிநாள் இன்றாகும். இரு அணிகளுக்கும் இரு இனிங்சில் துடுப்பாடும் சந்தர்ப்பமுள்ளது. பெரும் பாலும் அவுஸ்திரேலியாவுக்கு இனிங்ஸ் வெற்றிவாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ராவிட் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் பாக்.தலைவர் இன்சமாம் கூறுகிறார்



இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக தற்போது ஜொலிப்பவர் ராகுல் ராவிட், எந்தக்கால கட்டத்திலும் சிறப்பாக ஆடிய திறமை அவருக்குண்டு. அணியை வெற்றி பெற வைப்பதிலும் சரி, காப்பாற்றுவதிலும் சரி ராவிட் முக்கிய பங்கு வகிப்பார்.

கொல்கத்தா டெஸ்டில் இந்தியாவின் வெற்றிக்கு அவர் காரணமாக இருந்தார். முதல் இன்னிங்சில் அவர் 110 ஓட்டமும் இரண்டாவது இன்னிங்சில் 135 ஓட்டமும் எடுத்தார்.

இதற்கிடையே ராகுல் ராவிட் உலகின்தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்' என்று பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

ராவிட் மிகவும் சிறப்பாக துடுப்பாட்டம் செய்கிறார். என்னைப் பொறுத்தவரை அவரே உலகின் தலைசிறந்த துடுப்பாட்டவீரர் ஆவார். தொடர்ந்து விக்கெட்டுகள் விழுந்தால் தோல்வியைத் தவிர்க்க முடியாது. கும்ளே சிறந்த பந்துவீச்சாளர்.

அவரது பந்து வீச்சுப் பாராட்டும்படி இருந்தது.

இந்தத் தோல்வியை மறந்து பெங்களூர் டெஸ்டில் சிறப்பாக விளையாடி வெற்றி பெறுவோம். தொடரை எங்களால் சமன் செய்ய முடியும்என்றார்.


# சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் நேற்று திருமண பந்தத்தில் இணைந்தார்



இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (வயது -33) சென்னை மலர் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மதிமலர் (வயது-24) திருமணம் எழும்பூர் ராணி மெய்யம்மை திருமண மண்டபத்தில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது.


ஒரு மாதத்துக்கு முன்பு அவர்களது திருமணம் நிச்சயிக்கப்பட்டது. முரளிதரன் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர். திருச்சியை பூர்வீகமாகக் கொண்ட அவரது குடும்பத்தினர் இலங்கையில் குடியேறி நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

மணப் பெண் மதிமலர் மறைந்த டாக்டர் எஸ். ராமமூர்த்தியின் இரண்டாவது மகள் மலேசிய தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த இவர்களது குடும்பம் சென்னையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது.



முரளிதரன் - மதிமலர் திருமணத்தில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கா மற்றும் தற்போதைய கிரிக்கெட் வீரர்கள் சனத் ஜெயசூரியா மற்றும் சமிந்தவாஸ் முன்னாள் இந்திய வீரர்கள் ரொபின்சிங் டி.ஏ.சேகர் ஆஷிஷ் கபூர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். டெஸ்ட் கிரிக்கெட்டில் 532 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தில் உள்ளார் முரளிதரன்.

# இது ஒரு சிறந்த வெற்றி; ராவிட்டுக்கு கங்குலி பாராட்டு



பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் கங்குலி கூறுகையில், "இது ஒரு சிறந்த வெற்றி. இந்த வெற்றி திருப்தி அளிக்கிறது. முதல் டெஸ்டில் வாய்ப்பை இழந்தோம். ராவிட் ஆட்டம் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கும்ளே சிறப்பாகப் பந்து வீசினார். அவர் முதல் பந்தில் யூனுஸ்கானை ஆட்டமிழக்க வைத்தது பாகிஸ்தானுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. தினேஷ் கார்த்திக் ஆட்டம் சிறப்பான ஒன்றாகும். பெங்களூர் டெஸ்ட் போட்டியில் நான் ஓட்டங்களைச் சேர்ப்பேன் என்றார்.

# பசிபிக் ஓபன் டென்னிஸ்; கிளைஸ்டர்ஸ் சம்பியனானார்



பசிபிக் ஓபன் டென்னிஸ் தொடரில் கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்காவின் இண்டியன் வெல்ஸ் நகரில் இறுதிப் போட்டி நடந்தது.. இதில் முதல்த்தர வீராங்கனையான அமெரிக்காவின் டேவன்போர்ட், பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ் மோதினர். அபாரமாக ஆடிய கிளைஸ்டர்ஸ் 6-4,4-6, 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். ஆண்கள் பிரிவில் நடந்த அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் அண்டி ரொடிக் அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட்டைச் சந்தித்தார். இதில் ஹெவிட் 7-6,6-7,7-6 என்ற செட்கணக்கில் போராடி வென்றார். மற்றொரு போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-1 என்ற செட்களில் ஆர்ஜென்ரீனாவின் கில்லர்மோ கேனசை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறினார்.

# யாழ். மாவட்ட வி. துறை நடாத்தும் இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்டலீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த திருமகள் வி.கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த பொமேர்ஸ் வி.கழகம். வலிகாமம் லீக்சைச் சேர்ந்த விக்னேஸ்வரா வி.கழகம் எதிர் யாழ். லீக்கைச் சேர்ந்த யூனியன் வி.கழகம். (41)

# யாழ்ப்பாணத்தில் கால்பந்து சுற்றுப் போட்டி; இளந்தென்றல் விநாயகர் அணிகள் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப்பிரிவின் அனுசரணையுடன் வலிகாமம் உதைபாந்தாட்ட லீக் நடத்தும் சுற்றுப்போட்டியில் நேற்றைய ஆட்டங்களில் மயிலங்காடு இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் சண்டிலிப்பாய் கல்வளை வினாயகர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளன. சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தாவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப் போட்டிகள் இடம்பெற்றன.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளம் தென்றல் வி.கழகத்திற்கும் யாழ். லீக்கைச் சேர்ந்த கலைவாணி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளன.

மற்றுமொரு ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகத்திற்கும் கலைமகள் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுள்ளன. (14)



## விளையாட்டு

# யூனியன் கல்லூரி அணிகள் தெரிவு

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15,17,19 வயதுப் பிரிவினர் கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யூனியன் கல்லூரி 14இற்கு 9 என்ற புள்ளிகள் கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வெற்றி பெற்றது.17 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி 23இற்கு 12 என்ற புள்ளிகள் கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வெற்றி பெற்றது.

19 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி வீராங்கனைகள் 35இற்கு 08 என்ற புள்ளிகளினால் மகாஜனாக் கல்லூரியை வெற்றி கொண்டு கோட்ட மட்ட சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. மூன்றாம் இடத்தை 15 வயதுப் பிரிவில் அளவெட்டி அருனோதயாக் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும், 19 வயதுப் பிரிவில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (41)


# பந்தை வீசி எறிகிறார் ஹர்பஜன்; மீண்டும் நடுவர்கள் குற்றச்சாட்டு



இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன் சிங் கொல்கத்தாவில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் இவரது பந்து வீச்சு எறியும் வகையில் இருந்ததாக நடுவர்கள், சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி.) புகார் கூறியுள்ளனர். மேலும் அவர் மூன்று வாரத்திற்குள் ஐ.சி.சி. யிடம் ஆஜராகி தனது பந்து வீச்சு முறையைச் சரிசெய்து கொள்ள வேண்டும் என ஐ.சி.சி.கூறியுள்ளது. இதனால் 24 ஆம்திகதி தொடங்கும் மூன்றாவது டெஸ்டில் ஹர்பஜன் பங்கேற்பாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

# கிளி.இந்துக்கல்லூரி,மத்தியகல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கும், கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் இடையில் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று நாளை பி.ப. ஒரு மணியளவில் கிளி. மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக கிளி.இந்துக் கல்லூரி ஆசிரியரும், இந்துக்கல்லூரி விளையாட்டு செயலாளருமான தர்மராஜன் தெரிவித்துள்ளார். மேற்படி போட்டி இனிவரும் காலங்களில் வருடா வருடம் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.



### சிந்தனைக்கு

விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக இராது, நேரடிப் பங்காளிகளாக மாறவேண்டும்

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-03-2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## உலகறிந்ததொன்று!

பொலநறுவை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் தேசவிரோதக் கும்பல் ஒன்றின் முகாம் உள்ளதை ஆங்கில வார இதழான சண்டே லீடர் படங்களுடன், கூடிய ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளது.ஆயினும் இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேசவிரோதக் கும்பல்களின் முகாம் இருப்பது என்பது புதிய கண்டுபிடிப்பல்ல. ஆகையினால் இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால், அது ஆதாரத்துடன் உறுதிப்படுத்தியுள்ளமை மட்டுமே முக்கியத்துவம் மிக்கதொன்றாகும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தேசவிரோதக் கும்பல்கள் சிறிலங்கா இராணுவத்தின் துணைப்படையாகச் செயற்பட்டு வருகின்றன என்பது உலகறிந்ததொன்று. இவர்களுக்கு ஆயுத தளபாடங்கள், தகவல் தொடர்பு வசதிகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் சிறிலங்கா அரசே வழங்கி வருகின்றது என்பதும் இரகசியமானதல்ல.

இந்த வகையில் இயங்கும் இத்தேசவிரோதக் கும்பல்கள் வடக்கு-கிழக்கு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் படைத்தரப்பின் முகாம்களிலோ அன்றி அதற்கு மிக அண்மையாகவோ - அதாவது இராணுவத் தரப்பின் முழு அளவிலான பாதுகாப்பிற்கு உட்பட்ட பகுதியிலேயே வாழ்கின்றன என்பதும் அனைவருக்கும் தெரிந்ததொன்று.

விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி இத்தேச விரோதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப் பட வேண்டும் என்பதும் அ[illegible] வடக்கு-கிழக்கில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதும் விதியாகும். ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் இத்தகைய நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாக இல்லை. மாறாக, இத்தேச விரோதக் குழுக்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து போசித்து வருவதாகவே சிறிலங்கா அரசு உள்ளது.

இந்த வகையில், பாதுகாக்கப்படும் / பராமரிக்கப்படும் ஒரு தேசவிரோதக் குழுவின் முகாம் தொடர்பான தகவல்களையே கொழும்பு வார இதழ் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே, பொலநறுவை மாவட்டத்தில் தேசவிரோதக் குழுக்களின் நடமாட்டம் அதிகமாகவுள்ளதென வெளியாகியிருந்த தகவல்களை இப் பத்திரிகை தனது செய்தி மூலம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இதேசமயம், எவ்வாறு தேசவிரோதக் குழு ஒன்றின் முகாம் பொலநறுவை மாவட்டத்தில் இருப்பது ஆச்சரியம் அளிப்பதாக இல்லையோ அதேபோன்றே அவ்வாறு ஒரு முகாம் இல்லை என மறுத்துள்ள சிறிலங்கா இராணுவப் பேச்சாளரின் கூற்றுக்களும் உள்ளது. ஆனால், இதனை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க மறுத்துக் கூறியுள்ள விதம்தான் பரிதாபகரமானதாகவுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவின் முகாம் எதுவும் கிடையாது. இதனை உறுதியாகவும், தெளிவாகவும் கூறமுடியும் எனத் தெரிவிக்கும் அவர் ஆனால், செய்தியாளரின் தகவலை மறுப்பதற்குத் தயாராக இல்லை. இருப்பினும், வலிந்த பின்னணியுடன் இச்செய்தி வழங்கப்பட்டதாகவும், அதில் எது உண்மை என்பது பற்றியெல்லாம் கருத்துக் கூறவிரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளமை அவரின் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத பரிதாபகரமான நிலையையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

அதாவது, பத்திரிகை வெளியிட்ட செய்தியை மறுக்க முடியாத இராணுவப் பேச்சாளர், தேசவிரோதக் குழுக்களின் முகாம்கள் அங்கில்லை என அடித்துக் கூறுகின்றார். அவ்வாறானால், வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வெளியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் அங்கு முகாம் அமைத்திருப்பது யார்? சிறிலங்கா இராணுவமும் அதன் புலனாய்வுத்துறையும் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் இம்முகாம் விடுதலைப்புலிகளுடையதாக இருக்கலாம் என்பது போன்றதொரு தோற்றப்பாட்டைத் தனது பேட்டியில் வெளிப்படுத்த முற்பட்டுள்ளார். ஆனால், இது அர்த்தமற்றதொன்று என்பது மட்டுமல்ல, சிறிலங்கா இராணுவத்தையும், அதன் புலனாய்வுத்துறையையுமே அவமதிப்பதும், கேவலப்படுத்துவதும் போன்றதாகும்.

ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் - அதுவும் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வெளியில் விடுதலைப்புலிகளின் முகாம் இருக்கலாம் எனவும், சிறிலங்கா இராணுவம் அதனை கண்டும் காணாததுபோல் உள்ளது போன்றும் பேசுவது எத்தனை தூரம் சிறு பிள்ளைத்தனமானது? ஏனெனில் இராணுவத் தரப்பின் கையாலாகாத்தனம் போன்றல்லவா அர்த்தம் கொள்ளத்தக்கது? இதனைச் சிறிலங்கா இராணுவத் தரப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளதா?

உண்மைகளை மறைப்பதற்காகப் பொய்களைக் கூறி அவமானங்களைத் தேடிக் கொள்வதைவிட சிறிலங்கா இராணுவத் தரப்பு மௌனம் காப்பது மேல். ஆனால், அதற்காக தேசவிரோதக் கும்பல்களைத் தமிழ்மக்களுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் எதிராகப் பயன்படுத்துவதற்கெனப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் இலங்கையில் அமைதிக்கும், அதன் எதிர்காலத்திற்கும் உகந்ததல்ல.

## மட்டு. பிரதேச செயலகப் பணியாளர்கள் 3 கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட பல்வேறு தரங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மட்டக்களப்பு நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அரசாங்க நிர்வாகத்தில் முறைகேடான தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும். அரசாங்க ஊழியர்கள் மற்றும அரசாங்க உடமைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அண்மையில் மண்முனைப்பற்று பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பிரதேச செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், கணக்காளர்கள், திட்டமிடல் அதிகாரிகள் எனப் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய வாசக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். முற்பகல் 9.00 மணிமுதல் 10.00 மணிவரை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகத்திடம் கையளித்தனர். எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பாகத் தமது கோரிக்கைகள் தொடர்பாக சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாகவும் இல்லை யேல், போராட்டம் மேலும் விஸ்தரிக் கபடும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

## வேலணை மக்களுக்கு நிவாரணம் நிறுத்தம் எதிராக மக்கள் போராட்டம்

யாழ். தீவகம் வேலணைப் பகுதியில் நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தினர்.

யாழ். வேலணை உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் வசிக்கும் 210 குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. இதைக் கண்டித்தே பிரதேச செயலகம் முன்பாக நேற்று முற்பகல் 9.30 மணிமுதல் 11 மணிவரை போராட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இப்போராட்டத்தின் இறுதியில் சிறிலங்கா அரசிற்கான மனுவும் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது. அண்மையில் மீள்குடியமர்விற்கென 25 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டதாகவும், இதனை அடுத்து நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்த மக்கள், தமக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படாமையால் தமது இயல்பு வாழ்வில் இன்னமும் நெருக்கடி நிலை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இந்தப் போராட்டம் நடைபெற்றதால் நேற்றுக் காலை பிரதேச செயலகம் செயலற்றிருந்துள்ளது. மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்ட அரச அதிகாரிகள் இதற்கான தீர்விணைப் பெற்றுத்தருவதாகக் கூறியதாகத் தெரிகிறது.

## பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்கள் மே மாத இறுதிக்குள் வெளியேற்றப்படுவர்

### - அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்போது பாடசாலைகள், நலன்புரி நிலையங்கள் மற்றும் கூடாரங்களில் தங்கியிருக்கும் மக்கள் எதிர்வரும் மே மாத இறுதிக்குள் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா அறிவித்துள்ளார்.

இவர்களுக்கென முப்பதாயிரம் தற்காலிக வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவற்றில் சுமார்பத்தாயிரம் வீடுகள் தமிழ் - சிங்களப் புத்தாண்டு சமயத்தில் இந்த மக்களிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.ஒரு வீட்டை நிர்மாணிக்க நாற்பதாயிரம் ரூபா செலவாகுவதாகவும் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

## நிவாரணப் பொருட்களைப் பதுக்கி வைத்தவருக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

(திருகோணமலை)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட உணவுப பொருட்களை விநியோகிக்காது பதுக்கி வைத்திருந்த குற்றத்திற்காக ஆறுமாதக் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கோமரங்கடவல கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த எஸ்பி.குணதிலக, அவர் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்திருப்பதால் அவரைப் பிணையில் விடுவிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணைமனுவை திருகோணமலை நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நிராகரித்தார்.

"நாட்டிலும், இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்ளும் மோசடிகள் சம்பந்தமாக நடக்கின்ற சம்பவங்கள் குறித்து மன்று மிகுந்த விழிப்புணர்வுடன் உள்ளது. நடக்கும் சம்பவங்கள் குறித்தும் கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, வாயிருந்தும் ஊமைபோல இருக்க மன்று விரும்பவில்லை. தன்வயிற்றுப் பாட்டுக்காக அரச சார்பான நிறுவனங்களிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் பொதுச் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு இந் நீதிமன்றத்தின் கரங்கள் இறுக்கப்பட்ட நிலையில் பிணை வழங்கப்படாமல் பல மாதக்கணக்கில் ஏழை, எளியவர்கள் சிறையில் வாடுவதை மன்று நேரடியாகவே கண்டு கொண்டிருக்கின்றது. ஏழைக்கு ஒரு நீதியும், செல்வாக்குள்ளவர் களுக்கு ஒரு நீதியும் வழங்கப்படு மானால் மன்றின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடும் அபாயத்தை மன்று எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இந்த அவநம்பிக்கையைப் போக்க வேண்டிய பாரிய பொறுப்பு மன்றுக்கு உண்டு. தன்வயிற்றுப் பாட்டுக்காகக் களவெடுப்பவனுக்கும், மற்றவர்களின் வயிற்றிலடித்து மோசடி செய்பவனுக்கும் இடை யில் பாரிய இடைவெளி உண்டு என்பதை மன்று தெளிவுபடுத்த விரும்புகின்றது".

வேலியே பயிரை மேய்வது போன்ற நிலை பெருகிச் செல் வதை மன்று விரும்பவில்லை. இச்செயல்கள் குறித்து கடுமையான அணுகுமுறையையே மன்று கொண்டிருக்க விரும்புகின்றது.

"எனவே குற்றத்தின் பாரதூரத் தன்மை, பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தராக உள்ள எதிரியின் பொறுப்பற்ற செயல் என்பவற்றை மன்று கருத்திற் கொண்டு எதிரிக்கு பிணை வழங்குவது உகந்ததல்ல என்று மன்று தீர்மானிக்கின்றது. மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மன்று இப் பிணை விண்ணப்பத்தை நிராகரிக்கின்றது என்று நீதிவான் கணேசராஜா தனது பதின்நான்கு பக்கத் தீர்ப்பில் தெரிவித்தார். (25)

## ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லமுயன்ற 14இளைஞர்கள் கொழும்பில் கைது

கமரூன் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முயன்ற 14 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

போலிக் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி ஆபிரிக்க நாடான கமரூனுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இவர்களை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றத் தடுப்புப் பொலிசார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர். விமான நிலையத்தில் சோதனை நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்டு சென்ற பின்னர் இவர்கள் பற்றி சந்தேகித்த அதிகாரிகள் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதாகவும், இதனையடுத்தே இவர்கள் கைதானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கமரூனில் இருந்து வேறு கடவுச்சீட்டு மூலம் ஐரோப்பா செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும், அதற்கான கடவுச்சீட்டுக்கள் கமரூனில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளதாகவும், ஐரோப்பாவிற்குச் செல்ல இவர்கள் பல இலட்சம் ரூபாவை முகவரிடம் கொடுத்திருப்பதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

## கிளி. மாவட்ட வைத்தியசாலை அமெ. நிபுணர்கள் சத்திர சிகிச்சை


அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் சத்திர சிகிச்சை நிபுணர் குழுவினர் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சேவையாற்றி வருகின்றனர். பொது சத்திர சிகிச்சைக்குரிய கிளினிக் இன்றும்,நாளையும் காலை 9மணி முதல் மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறும். கேணியா, கட்டிகள் போன்ற நோய்களுக்கு சத்திர சிகிச்சைகள் நடைபெறும் என மாவட்ட வைத்தியஅதிகாரிஅறியத் தருகிறார்

# வடமராட்சி கிழக்கில் 155 வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு கையளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று வடமராட்சி கிழக்கில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் தமது குடியிருப்புக்களை இழந்து நலன் புரி நிலையங்களிலும் உறவினரின் வீடுகளிலும் வாழ்கின்ற மக்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினராலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையோடும் வேள்ட்விசன் மற்றும் கெயார் நிறுவனங்களினாலும் இரண்டு குடியிருப்புகளில் அமைக்கப்பட்ட 155 வீடுகள் நேற்றுக் குடியிருப்பாளர்களுக்குக் கையளிக்கப்பட்டன. நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் 10ஆம் வட்டாரம் உடுத்துறையில் அமைக்கப்பட்பெற்ற 95 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கிராம அலுவலர் தவராசா அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. பொதுச்சுடர்களை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பொறுப்பாளர் நடராசா, சுனாமி வேலைத்திட்ட மக்கள் குழுத்தலைவர் க.தனபாலசிங்கம் ஆகியோர் ஏற்றிவைக்க வீடுகளை கெயார் நிறுவனப் பிரதிநிதியும், கிராமத்தின் மூதாட்டியான அரியமலர் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த யூட் அவர்களும் கையளிப்பு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து உடுத்துறை 10ஆம் வட்டாம் கொக்கிளாய் வீதியில் அமைக்கப்பட்ட குடியிருப்பிலுள்ள 60 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு மதியம் 12.00 மணியளவில் கிராம அலுவலரின் தலைமையில் ஆரம்பமானது. இதில் பொதுச் சுடர்களை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொருளாளர் கடல்புலிகளின் கட்டளை அதிகாரி செஞ்சேரன் செயலணிக்குழுவைச் சேர்ந்த சுடர்மணி ஆகியோர் ஏற்றி வைக்க வீடுகளை தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த யூட் வேள்ட்விசன் பிரதிநிதி ஆகியோர் கையளித்தனர்.



கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி சிறப்புரையினை நிகழ்த்தினார். இந் நிகழ்வில் அரச அரச,சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், போராளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

# கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ‘பூவரசம்வேலியும் ,புலுனிக்குஞ்சும்’

## -லண்டனில் வெளியீடு

கவிஞர் புதுவை இரத்தினதுரை கடந்த பத்தாண்டுகளாக எழுதிய கவிதைகளின் தொகுப்பாகிய ‘பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்’கவிதை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை லண்டன் ரூற்றிங் முத்துமாரியம்மன் கோயில் சிவயோக மண்டபத்தில் நடைபெறுகிறது.

சட்டத்தரணியும் கவிஞருமாகிய ந.சிறீக்கந்தராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மங்கலவிளக்கினை வைத்திய கலாநிதி ஆனந்தி கருணைலிங்கம் ஏற்றிவைக்க ரி.ரி.என். தொலைக்காட்சியைச் சேர்ந்த கைலாசபதி வாசன் வரவேற் புரையை நிகழ்த்துவார். வாழ்த் துரைகளை நா.சோமஸ்காந்தசர் மாவும், ச.ஶ்ரீரங்கனும் வழங்குகின் றனர். சிறப்புரைகளை கலாநிதி பற்றி மாகரனும் வெளியீட்டுரையை ஊடக வியலாளர் பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்துகின்றனர். சிவயோகம் அதிபர் நா.சீவரத்தினம் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை கமலாநாதக் குருக்கள் பெற்றுக்கொள்ளுவார். மதிப்பீட்டுரைகளை பி.பி.சி.மூத்த அறிவிப்பாளர் ஆனந்தி சூரியப் பிரகாசமும், ஊடகவியாளர் ஏ.சி.தாசீசியஸ்சும்,கவிஞர் கருணானந்தராஜாவும் ஆற்றுகின்றனர். கவிஞர் பால ரவி நன்றியுரை நிகழ்த்த கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறுகின்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக 500 பக்கங்களில் இந்நூல் அழகுற வெளியிடப்படுகிறது. இந்நூலின் வெளியீட்டாளர்களான நங்கூரம் பதிப்பகத்தினர் மிக விரைவில்தாயகத்திலும் நூலை வெளியிட ஆவன செய்து வருகின்றனர். இந்நூலுக்கான முன்னுரையை பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதியுள்ளாரென்பதும் இவ்விழாவின் நினைவாக நூல் வெளியீட்டு விழா மலர் ஒன்று அத்தினம் வெளியிடப்படுகிறதென்பதும் குறிப்பிடத் தக்கது.

# எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலை தொடர்பில் மக்கள் மத்தியில் விளக்க ஐ.தே.க.முடிவு

## - இந்திய பா.உ களின் உதவி பெறவும் முடிவு

(கொழும்பு)

எஸ் பி திஸாநாயக்கவை விடுதலை செய்யக் கோரி மாவட்ட மட்டத்தில் மக்கள் மத்தியில் தெளிவுகள் வழங்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியினால் நேற்றுக் களுத்துறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்ட நகர்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் அரசியல் கைதியான எஸ் பி திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையானது மனித உரிமை மீறலாகும் எனக்குறிப்பிட்டார். இதே வேளை அரசியல்கைதியான எஸ் பி திஸாநாயக்கவை விடுதலை செய்யும் வகையில் அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியைப் பெற ஐக்கிய தேசியக் கட்சி முனைப்பை மேற்கொண்டுள்ளது. இதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பிண் ராஜித சேனாரட்ண இன்று இந்தியாவுக்குப் புறப்படவுள்ளார். (32)

# தேர்தல் விஞ்ஞாபனத்தை மீறும் வகையிலான செயற்பாடுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்குக!

## -சனாதிபதியிடம் ஜே.வி.பி.வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல் விஞ்ஞாபனத்தை மீறும் வகையில் இடம்பெறும் செயற்பாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா எழுதிய கடிதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்தவொரு அரச நிறுவனத்தையும் தனியார் மயப்படுத்தப் போவதில்லையென கூட்டமைப்பு அரசாங்கம் உறுதி அளித்திருந்தமையை இக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ள ரில்வின் கிடைத்த மக்களின் ஆணைக்கு முரணாகச் செயற்பட கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு எந்தவொரு அதிகாரமும் இல்லையெனவும் கூறியுள்ளார்.

முதலீட்டுச் சபையின் தனியார் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமையால் உயர் கல்வி தனியார் மயப்படுத்தப்பட்டு வருகின்றது. என்ற குற்றச்சாட்டு மாணவர்களினாலும் ஆசிரியர்களாலும் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும், தனியார் மயப்படுத்தல் பிரச்சினையை தீர்ப்பதற்கு சனாதிபதி சரியான நடவடிக்கையைத் எடுப்பாரென தான் நம்புவதாகவும் ரில்வின் சில்வா மேலும் கூறியுள்ளார்.

## அரசாங்கம்

வுபடுத்த வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை அரசாங்கத்திற்குக் கூடத் தெரிவு செய்ய முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமஷ்டி முறையின் தேவையை சனாதிபதி கூறுகின்றார். சமஷ்டி முறைக்காகவே 99ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின்போது மக்கள் ஆணை கிடைத்ததாகவும், வேண்டுமென்றால் விருப்பமில்லாதவர்கள் செல்லலாம். எனக்குப் பிரச்சினையில்லை எனச் சனாதிபதி கூறுகின்றார்.

சமஷ்டி முறைவந்தால் நாடுபிளவுபடும் என்று மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது. நாம் அரசாங்கத்தில் இருக்கும் வரை சமஷ்டி முறையொன்றுக்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒன்றிணைந்த கட்டமைப்பிற்கு இடமளிக்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது.

இதேவேளை கூட்டமைப்பைப் பாதுகாத்துக் கொள்வோம் என மகிந்தராஜபக்ஷ கூறுகின்றார். இதிலிருந்து அரசாங்கம் எங்கே செல்கின்றது என்று கூறவேண்டும் இந்தப் பயணம் காலிக்கா அல்லது கேகாலைக்கா எங்கே செல்கின்றது என நாட்டு மக்களுக்குக் கூறவேண்டும் என மேலும் அவர் கூறினார்.

## பொலநறுவை...

ரும் பார்ப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம் மோதலில் பலியானதாகக் கூறப்படும் இருவரும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இம் மோதலையடுத்து அப்பகுதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கண்காணிப்புக் குழுவினரைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கு சென்றுள்ளதாகவும், பெருமளவு பொலிசாரும், இராணுவத்தினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறில...

படையில் முதலாவதாகக் கொல்லப்பட்டவரும் இவரே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையில் இலங்கை சார்பில் ஏறத்தாழ 400 படையினர் ஹெய்ட்டியில் நிலை கொண்டுள்ளனர். சர்வதேச ரீதியாக அனுப்பப்பட்ட ஏழாயிரத்து 400பேர் அங்கு நிலை கொண்டுள்ளனர். ஹெய்ட்டியில் முன்னாள் படைச்சிப்பாய்கள் ஆட்சியாளருக்கு எதிராக நடத்திவரும் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள அமைதியின்மையையடுத்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப்படை அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. நேற்றைய தாக்குதலில் காயமடைந்த பதினொரு பேரில் இலங்கையின் இராணுவ சிப்பாய்கள் மூவரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஓட்ட...

மீது நெஞ்சிலும் வயிற்றிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத போதிலும் அப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் ஆயுத பாணிகளாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என அப் பிரதேச மக்கள் நம்புகின்றார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஓட்டமாவடியிலுள்ள மற்றுமொரு நகைக் கடையிலும் இப்படியானதோர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்று ஒருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரகுபதி...

னார்கள்.

கேணல்ஜெயம், பொன்தியாகம் ஆகியோர் வீடுகளுக்கான திறப்புகளை பயனாளிகளுக்கு வழங்கினார். ஒரு குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளடங்கிய பொருட்கள், சமையல் உபகரணங்கள், உலர் உணவுப் பொருட்கள்,நுளம்பு வலைகள போன்றவற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தென்னங் கன்றுகள், பலாக்கன்றுகள், தேசிக் கன்றுகள் போன்ற பயன் தரும்மரக்கன்றுகளும் வழங்கபட்டன.

இந் நிகழ்வில் பொறுப்பாளர்கள் போராளிகள், பொதுமக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டார்கள். (தீ)

# எப்பாவல பொசுபேட் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கு எதிராகப் போராட்டம்

## - ஆட்சியின் பங்காளிக்கட்சிகள் நடவடிக்கை

எப்பாவல பொசுபேட் நிறுவனத்தைப் பாதுகாக்கும் வகையில் ஆர்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன. இந்த பொசுபேட் நிறுவனத்தை அரசாங்கம் விற்பனை செய்ய முயற்சித்து வருவதாக குற்றம் சுமத்தியே ஆளும்கட்சியிலுள்ள பல கட்சிகளால் இந்த ஆர்பாட்டங்கள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி முன்கொண்டு சென்ற தனியார்மயமாக்கல் கொள்கையை அதேநிலையில் நடைமுறைப்படுத்தி வருவதாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் பட்டி வீரக்கோன் இது தொடர்பாகக் கூறுகையில், அரசாங்கத்தில் இருந்துகொண்டே பங்காளிக் கடசிகள் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (32)

# சாவு அறிவித்தல்



**சித்திரமூர்த்தி கலைவாணி**
(கணக்காய்வாளர்
நிதிப்பிரிவு
அரசியல்துறை)

என்பவர் 2005.03.20 அன்று அகாலச்சாவடைந்துள்ளார். இவர் சின்னையா சித்திரமூர்த்தியின் (சைனீஸ்) அன்பு மனைவியும், ஈஸ்வரன் இந்திராணி தம்பதிகளின்அன்புமகளும், சின்னையா செல்வநாயகி தம்பதிகளின் அன்புமருமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2005.03.22 இன்றுகாலை 9.00 மணியளவில் 233, ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்-**
**கணவர்,**
**சித்திரமூர்த்தி [சைனீஸ்]**

(சி.11570)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது